தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

துணர் ௪௨

பிரமாதீச ஆண்டு

1973 — 74.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :

அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ.,

உள்ளுறை.

பிரமாதீச ஆண்டு துணர் சஎ மலர் க-யஉ

1973—74

		பக்கம்
1	புத்தாண்டே வருக! புலவர். சு. பாலசுந்தரம்	1
2	கரந்தைத் தமிழ்ச் சங்க மணி விழா நிகழ்ச்சிகள்	3
3	முத்தமிழ் முப்பது பாவலரேறு பெருஞ்சித்திரனார்	9
4	கம்பரின் வீரச்சுவை K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்,	11
5	உரையனுபவம் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை	19
6	யாழ்நூல் - இரண்டாம் பதிப்பு - வேண்டுகோள்	33
7	இலக்கண நூலார் பழமொழிக்கு வகுத்த வரையறை வ. பெருமாள், எம். ஏ. பி. டி. எம். ஆர். ஏ. எசு.	35
8	இடைக்கால ஐரோப்பாவில் கல்வி அர. சேஷாசலம், எம். ஏ.,	43
9	திருக்குறட் கருவூலம் நக்கீரன் வழியடிமை வித்துவான், பி. மா. சோமசுந்தரனார்	46 95, 104
10	எகரவினா டாக்டர் மோ. இசரயேல்	55
11	சிவத்திருஞானியார் அடிகள் நூற்றாண்டு விழா	62
12	முல்லைப் பாட்டு K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,	65, 110
13	எற்றமும் ஏற்றமும் டாக்டர் இராம. சுந்தரம்	72
14	திருக்கோவையாரும் திருவாசகமும் வித்துவான் சு. சாமிஐயா, எம். ஓ. எல்.,	76
15	கலை உரைத்த கற்பனை கொண்டல் சு. மகாதேவன், பி. எசி, எம். ஏ.,	90
16	வாக்கிய அமைப்பு டாக்டர் கி. அரங்கன்	97
17	மொழி வரலாறு வ. பெருமாள், எம். ஏ., பி. டி.,	117
18	அறமும் ஆற்றலும் த. பொ. தண்டபாணி	124, 156, 178
19	தமிழின் பொற்காலம் ம. வெ. சதாசிவம்	129
20	மனிதன் தோற்றக் காலமும் இலெமூரியாக் கண்டமும் செ. இராமநாதன், M. Sc., F. M. S. & மே. கி. இலக்குமி நாராயணன், M. Sc., F. M. S.	133

21 அழகின் சிரிப்பில் கவிதைத் தத்துவம் 139
துரை. சீனிசாமி
22 திருமுறைச் சிறப்பு 150
பாவலரேறு. ச. பாலசுந்தரம்
23 சிறுபாணாற்றுப் படையில் — உவமைச் சிறப்பு 161
மு வை. அரவிந்தன், எம். ஓ எல்.
24 மாணவர் கவிதை — ஒரு மதிப்பீடு 170
அ பாலருவாயன், எம். ஏ
25 இலங்கைத் தமிழர் இன்னல் தீர 182
பி. விருத்தாசலம், எம். ஏ,
26 திருக்கற்குடி 185, 217, 239, 305
பேராசிரியர் சி. கோவிந்தராசனார்
27 இரங்கற்பா 190
பாவலரேறு ச. பாலசுந்தரம்
28 கையறவு 192
29 சிறுபாணாற்றுப்படையில்—உவமைச்சிறப்பு 193
மு வை அரவிந்தன், எம் ஓ எல்.
30 அப்பர் தேவாரத்தில் அரிய சில சொல்வடிவங்கள் 199
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம். ஏ , பி எச். டி.
31 'நின்' — ஈற்றுத்திரிபும் இயல்பும் 208
பி. மா. சோமசுந்தரம்
32 க. த. சங்க கலைமகள் விழா 221
33 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா 223
34 கையறுநிலை 224
35 தமிழும் இலக்கியத் திறனாய்வும் 225
அர. சிங்காரவடிவேலன்
36 கடவுட் காட்சி 232
வித்துவான் அ வைத்திலிங்கம்
37 புதுக்கவிதை புனைவோர்க்கு 234
டாக்டர் சொ. சிங்காரவேலன்
38 பழமொழியும் கம்பராமாயணமும் 243
வ. பெருமாள், எம். ஏ , பி. டி
39 நக்கீரர் கழகம் 252
40 பாராட்டும் பரிசளிப்பும் 253
41 புறநிலை வாழ்த்து 254
42 மதிப்புரை 256
43 கண்ணுடையர் 257
பேராசிரியர் கு சிவமணி
44 திருவள்ளுவமாலை 268
அ. தட்சணாமூர்த்தி, எம். ஏ.
45 வள்ளுவத்தில் வாய்மொழி இலக்கியம் 274
தே. லூர்து. எம். ஏ

46 சிலப்பதிகாரக் கருத்தரங்கும் நூல்வெளியீட்டு விழாவும் 279
டாக்டர் வ. சுப. மாணிக்கம்
47 வானவெளிக் கற்பனையில் 283
டாக்டர் சொ. சிங்காரவேலன்
48 இயற்கைப் புலவர் கம்பர் 287, 309, 346
K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.
49 கடல் நடுவே காரானை 289
கவிஞர் கோ. கோவை இளஞ்சேரன்
50 வானவெளிக் கற்பனையில் 311
டாக்டர் சொ. சிங்காரவேலன்
51 கோனாட்சியில் குடியாட்சி — திருக்குறள் 314
பேராசிரியர் கு. சிவமணி
52 இளங்கோவடிகள் தமிழ்க் கழகம் 320
53 தமிழ்க் கல்லூரிகளின் எதிர்காலம் 321
பி. விருத்தாசலம், எம். ஏ.
54 புலவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் 329
டாக்டர் வ. சுப. மாணிக்கம்
55 கவியரங்கம் எண் ஒன்று 334
இராமையன், எம். ஏ,
56 கவியரங்கம் எண் இரண்டு 338
செல்வக் கணபதி
57 மூவன் 343
டாக்டர் சொ. சிங்காரவேலன்
58 செய்திக் குறிப்பு 351
59 இரண்டாம் சிலப்பதிகாரக் கருத்தகம் 353
டாக்டர் வ. சுப. மாணிக்கம்
60 சஞ்சீவி பர்வதத்தின் சாரல்—ஒரு திறனாய்வு 357
S. ஆரோக்கியநாதன், எம். ஏ.
61 ஆளுடைய அடிகளின் அருளுவமைகள் 361
புலவர் ச. பாலசுந்தரம்
62 இன்று? நேற்று? 369
பேராசிரியர் வே. வேலப்பன்
63 வெண்குடைக் காவலன் 370
பி. விருத்தாசலம், எம். ஏ.
64 கவியரங்கில் — பேகன் கவிதை 371
பாண்டியன், பி. ஏ., பி. டி.
65 கரந்தைப் புலவர் கல்லூரி ஆண்டு விழா 382
66 உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி ஆண்டு விழா 383
67 தமிழின் உயர்வு 384
68 கையறவு 384

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் சஎ	திருவள்ளுவர் யாண்டு உ௲௪ பிரமாதீச, சித்திரை (1973 — ஏப்ரல் — மே)	மலர் க

தமிழ் வாழ்க

புத்தாண்டே வருக!

1 திகழொளிக் கதிரோன் செந்தீச் சீருற மேழ வீட்டில்
தகவொடு வளர்க்கக் காரி சார்ந்தெரு தில்லம் வாழப்
புகழொடு செவ்வாய் ஆசான் புணர்ப்பொடு சுறவம் சூழ
மிகுபுகழ் வெள்ளி யோடு மீனத்தில் அறிவன் நிற்க

2 வளந்தரு மகவின் மீனுள் மகிழ்வொடு முகமன் கூறக்
கிளந்தெழு பண்பின் வெள்ளிக் கிழமைநற் கேண்மை கூர
இளந்தளிர் விரித்துத் தேமா எழில்மலர் சொரியத் தென்றல்
வளந்திகழ் வேனிற் பாவை வாழ்த்திட வரும்புத் தாண்டே!

3 வருக செந்திருவே! மக்கள் வாழ்வுநன் கொளிரப்போந்த
பெருகுசீர் பிரமா தீசப் பெயர்கொளும் அன்னாய்! உள்ளம்
உருகுநல் லன்பா லேத்தி உவப்புடன் வரவேற் கின்றேம்
தருக பேரின்பம்! யாவும் தழைத்திட வருக பாவாய்!

4 சித்திரைத் தோழி உள்ளம் செழித்திடச், சிறுமை நீங்கி
இத்தரை வாழ்வோ ரெல்லாம் இகல்தவிர்ந் தன்பு மேவி
ஒத்தது தெரிந்து நண்போ டுறவுகொண் டிணைந்து வாழப்
புத்தொளி வழங்கி இன்பம் புரிகென வரவேற் கின்றேம்

5 அணிபெறத் தமிழ்த்தொண்டாற்றி அகமகிழ் தமிழ்ச் சங்கத்தின்
மணிவிழாக் குரிய வெல்லாம் வழங்கிய பரிதாபிப் பெண்
தணிவிலாப் புகழுன் பால்தந் தேகநீ சார்ந்த நாளே
பணியெலாம் தழைக்க வந்தாய் பாரெலாம் செழிக்கச் செய்வாய்!

6 பன்னிரு திங்கள் ஆட்சி பரிவொடு புரியப் போந்த
அன்னைநின் அருளால் இன்ப அமைதியிவ் வுலகங் கொள்ள
மன்னிய தொழில்கள் வாழ வயல் வளம் பெருக நாட்டில்
துன்னிய இடர்கள் நீக்கித் தொல்லறந் துலங்கச் செய்வாய்

7 வெள்ளியங் கிழமை பூத்த வென்றிசேர் புத்தாண்டே! நின்
தெள்ளிய வரவால் மாந்தர் சிந்தனை தூய்மை யுற்றுக்
கள்ளமும் பொய்யும் வஞ்சக் கருப்பொடு வெறுப்பும் மாறி
ஒள்ளிய ராகி மெய்ம்மை உழைப்பினுல் பொலிய வேண்டும்

8 போர்முறைக் கருவி பொன்றிப் பொதுநலப் பணிகள் துன்றி
ஏர் முறைக் கருவி வென்றி எய்தநல் லாண்மை மேவிச்
சீர்முறைக் கல்வி ஒன்றிச் செய்தொழில் பெருகி இன்பு
நேர்முறைக் கலைகள் மன்றில் நிறைந்திட வருக! வாழ்க!

9 கார்முகில் பொழிந்து நாடு களிப்புற விளையுள் மிக்குச்
சீர்வளர் வணிகம் ஓங்கிச் செகமெலாம் வளமை கூர
நேர்மையும் அறமும் தூய நீதியும் நிலைபெற் றோங்க
நீர்மைகொள் கலைகள் பூத்து நிறை வுற வருக! வாழ்க!

10 பெற்றிகொள் பிரமா தீசப் பெரும்புகழ் நங்காய்! நாட்டைப்
பற்றிய வறுமை, தீய பல்குழு மடமை நீங்கி
ஒற்றுமை தழைத்து மண்மேல் ஒண்டமிழ்ப் பண்பா டோங்கி
வெற்றி கொண் டொளிர வேண்டி விருப்பொடு வாழ்த்துகின்றோம்.



தன்னலங் கருதாப் பொதுநலத் தொண்டராய்த்
தமிழ்ப்புல வோர்கள் தம்பெருந் தோழராய்
எண்ணில் சிறார்க்குக் கண்ணருள் அன்னையாய்
உடல்பொருள் உயிரெலாம் உரிமை யாக்கித்
தமிழ்த்தொண் டாற்றிய சங்கத் தலைவர்

செந்தமிழ்ப் புரவலர்

தமிழவேள்

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை

தோற்றம் : 7—5—1883 **மறைவு : 9—5—1941**

கரந்தைத் தமிழ்ச் சங்க
மணிவிழா நிகழ்ச்சிகள்

'தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்; அறிவுயரும்; அறமும் ஓங்கும்' என்பதை நன்குணர்ந்து செந்தமிழ்த் தாயின் அரந்தை கெடுத்து வளம்பல பெருக்குதற்குத் தோன்றிய கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் மணிவிழா திருவள்ளுவராண்டு 2004. சித்திரைத்திங்கள் 1, 2, 3 நாட்களில் (13, 14, 15-4-1973) சிறப்புற நடைபெற்றது. விழாவை முன்னிட்டுக் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெருமன்றம் கண்டோர் நெஞ்சம் கவரத் தக்க வகையில் எழில்மிகு வண்ண ஓவியக் கூடமாக ஒப்பனை செய்யப் பெற்றிருந்தது. கலைநிகழ்ச்சிகளும் நாடகங்களும் நடைபெறத் தனியே ஒரு நாடக மேடை போடப்பட்டிருந்தது. விழாவுக்காக வருவோர் கோடை வெயிலில் வாடாதவாறு பெரியதோர் ஊருட் புகுந்தாற் போன்ற பரப்பும் நீருட் புகுந்தாற் போன்ற குளிர்ச்சியும் கொண்ட இரண்டு பெரிய பந்தர்கள் போடப்பட்டிருந்தன. புதுமணல் பரப்பிய அந்தப் பூம்பந்தர்களில் பல்வேறு வண்ண மூட்டப்பெற்ற பனங்குருத்தோலைகளாலும் தென்னங்குருத் தோலைகளாலும் உருவாக்கப்பெற்ற தோரணங்களும், மாவிலைக் கொத்துக்களும், இளநீர்க்குலைகளும், பனங்குலைகளும், தாறுகளோடு கூடிய வாழைகளும், வண்ண மின்விளக்குகளும் கட்டப் பெற்றிருந்தன. இனிய நாதசுர இசை மாலை 5 மணி தொடங்கிக் குழுமியிருந்த பெருமக்களின் செவிகளை நிரப்பி இன்பம் விளைத்தது பந்தரின் கால்கள் தோறும் தொட்டிகளில் வளர்க்கப்பட்ட அழகிய காட்சிச் செடிகள் விளங்கின. மென்மையான இளந்தென்றல் வீசுந்தோறும் அசைந்தாடிய அச்செடிகள் விழாவுக்கு வந்திருந்த தமிழன்பர்களை வணங்கி வரவேற்பன போல் விளங்கின

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக முப்பது ஆண்டுகள் பணியாற்றிய செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் திருவுருவச்சிலை சங்கத்தின் வாயிலருகே நிறுவப்பெற்றிருந்தது. மணிவிழாவின் தொடக்க நிகழ்ச்சியாகிய இச்சிலைத் திறப்பிற்காகத் தமிழ்ச்சங்க வீதியை அடைத்துப் பெரியதொரு மேடை அமைக்கப்பட்டிருந்தது. அம்மேடை பண்டைத் தமிழக வேந்தர்களது திருவோலக்க மண்டபமோ என்னுமாறு ஒப்பனை செய்யப்பெற்றிருந்தது.

13—4—73 முதல் நாள் வெள்ளிக்கிழமை மாலை 7-30 மணி யளவில் சிலைத்திறப்பு விழா நடைபெற்றது. தமிழக உணவ மைச்சர் மாண்புமிகு மன்னை. ப நாராயணசாமி அவர்கள் தமிழக நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க அன்பழகன் அவர்கள், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு தமிழவேள் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆகிய மூன்ற மைச்சர்களும் விழாவுக்கு வந்திருந்தனர். விழாவுக்கு வந்திருந்த அமைச்சர்களுக்கும் சான்றோர்களுக்கும் சங்கத் தலைவர் செ. தனக்கோடி, பி ஏ. அவர்கள் வரவேற்புக் கூறினார்கள். அமைச்சர் பெருமக்கள் மூவருக்கும் சங்கக் சார்பில் வாழ்த்திதழ் கள் பாடியளிக்கப்பட்டன.

விழாவுக்குத் தலைமை தாங்கிய மன்னை ப. நாராயணசாமி அவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கம் நீண்ட காலமாகச் செய்து வரும் தமிழ்ப் பணியைப் பாராட்டிப் பேசினார்கள். பேராசிரியர் அன்பழகன் அவர்கள் கரந்தைப் புலவர் கல்லூரி பலநூறு தமிழ்ப்புலவர்களை உருவாக்கி நாட்டுக்கு அளித்து வருவதையும், தமிழகத்தில் இலக்கிய மணம் கமழத் "தமிழ்ப்பொழில்" ஆற்றி வரும் பணியையும் சுட்டிக்காட்டிக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் மேலும் வளர வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

தமிழவேள் உமாமகேசுவரம்பிள்ளை அவர்களின் திரு வுருவச் சிலையைத் திறந்து வைத்த முதலமைச்சர் அவர்கள் 'தமிழவேள் சிலை சேரன் செங்குட்டுவன் சிலையோ, பாண்டியன் நெடுஞ்செழியன் சிலையோ, சோழன் கரிகாற் பெருவளத்தான் சிலையோ என்று கண்டோர் வியப்புறுமாறு செம்மாந்த தோற்றத் தோடு அமைந்துள்ளது குறித்துத் தம்மகிழ்ச்சியைத் தெரிவித் துக் கொண்டார்கள். தமிழன் தமிழிலே பேச நாணமுற்ற வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் தமிழ்ச் சங்கத்தைக் கட்டிக்காத்த தமிழவேள் அவர்கள் பெருமுயற்சியால் 'ஸ்ரீமான்' திருவாளர் ஆனதையும் 'கனம் அக்கிராசனாதிபதி' அவர்கள் 'பெருமதிப் பிற்குரிய தலைவர்' ஆனதையும் எடுத்துக் காட்டி, நல்ல தமிழ்ச் சொற்கள் நாட்டு மக்கள் நாவிலே நடமாடுவதற்குத் தொண்டு செய்த தமிழவேள் வழி நின்று தமிழன் என்ற இனவுணர்ச்சி யோடு தமிழ்ப்பணி ஆற்றுவதற்கு அவர் சிலை முன் நின்று தமிழர்கள் சூளுரைத்துச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். தமிழவேள் சிலையினைச் செம்மையாக உருவாக் கிய சிற்பிகளுக்குப் பொன்னாடை போர்த்திச் சித்திரவேலைப் பாடுள்ள செம்பு-வெள்ளித் தட்டுப் பரிசளிக்கப்பட்டது. சங்கப் பொருளாளர் திரு ச. சுந்தரம், பி. ஏ., பி எல். அவர்கள்

நன்றியுரை கூறச் சங்க வாழ்த்து நாட்டு வாழ்த்துடன் முதல் நாள் விழா இனிதே நிறைவுற்றது.

அன்று இரவு 8-30 மணியளவில் கலை நிகழ்ச்சிகளுக்காகத் தனியே போடப்பட்டிருந்த நாடக மேடையில் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்கள் நடித்த 'பாவலன் அளித்த பரிசு'' என்னும் நாடகமும், இராதாகிருட்டினத் தொடக்கப் பள்ளிச் சிறுமியரின் கலை நிகழ்ச்சிகளும் நன்கு நடைபெற்றன

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் 14—4—73 சனிக்கிழமை காலை 9-15 மணியளவில் தொடங்கின. முதலில் கவியரங்கம் நடைபெற்றது கரந்தைப் புலவர் கல்லூரிப் பேராசிரியர் பாவலர் பாலசுந்தரம் வரவேற்புக் கூறினார். கவியரங்கத்திற்குத் தலைமையேற்க வேண்டிய கவிஞர் கண்ணதாசன் அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக வராமற்போகவே டாக்டர் தமிழண்ணல் அவர்கள் தலைமையேற்றார்கள் ''ஐவகை நிலம்'' என்ற பொதுத் தலைப்பில் 'குறிஞ்சி'' பற்றிக் கவிஞர் முருகுசுந்தரமும், ''முல்லை பற்றிக் கவிஞர் தொல்காப்பியனும், ''மருதம்'' பற்றிக் கவிஞர் அப்துல் ரகுமானும் ''நெய்தல்'' பற்றி டாக்டர் தமிழண்ணலும், ''பாலை'' பற்றிக் கவிஞர் மா. செல்வராசும் கவிதைகள் பாடினர். பாவலர் பாலசுந்தரம் நன்றியுரை கூற 11-15 மணிக்குக் கவியரங்கம் முடிவுற்றது

பதினைந்து மணித்துளிகள் ஓய்வுக்குப் பிறகு 11-30 மணியளவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் எம் எல். சி அவர்கள் தலைமையில் பட்டிமன்றம் தொடங்கியது. புறநானூற்றில் சிறந்து நிற்பது வீரவுணர்வே என்னும் கொள்கையை விளக்கித் திருவாளர்கள் அப்துல் கறீம் எம். ஏ., புலவர் அ அறிவொளி, எம் ஏ, புலவர் சோம. இளவரசு, புலவர் வே. காத்தையன். எம். ஓ எல் ஆகியோர் வாதாடினர். அதனை மறுத்துப் புறநானூற்றில் சிறந்து நிற்பது அறவுணர்வே என்பதை விளக்கித் திருவாளர்கள் நா. பாலுசாமி, எம். ஏ., எம். லிட்., ஔவை து. நடராசன் எம் ஏ. எம். லிட், புலவர் தி. நா. அறிவொளி, புலவர் பாரதி பித்தன் எம் ஏ. ஆகியோர் வாதிட்டனர். பட்டிமன்ற நடுவர் தவத்திரு. அடிகளார் இருதரப்பார் வாதங்களையும் எடுத்து விளக்கி அறவுணர்வே புறநானூற்றிற் சிறந்து நிற்பது என்று முடிவு கூறினார்கள். கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வர் புலவர் பி. விருத்தாசலம் எம். ஏ. நன்றி கூறப் பிற்பகல் 3—15 மணியளவில் பட்டிமன்றம் முடிவுற்றது. செவி

யுணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்பதை மெய்ப்பிப்பார்போலப் பல நூற்றுக்கணக்கான மக்கள் பசியையும் மறந்து பட்டி மன்றத்தில் கூறப்பட்ட வாதங்களைக் கூர்ந்து கேட்டு இன்புற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

பிற்பகல் நிகழ்ச்சிகளுக்கு முத்தமிழ்க் காவலர் கி ஆ பெ. விசுவநாதம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். விழாத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர், சொற்பொழிவாளர்கள் ஆகியோரைச் சங்கத் தலைவர் வரவேற்று வாழ்த்துக் கூறினார்கள். முத்தமிழ்க் காவலருக்கும், கல்வியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களுக்கும் சங்கத்தார் சார்பில் வாழ்த்திதழ்கள் பாடியளிக்கப்பெற்றன கரந்தைத் தமிழ்ச் சங்க நிறைவேற்றுக் கழக உறுப்பினர் தென்னங்குடி நா. சுந்தரராச நாட்டார் அவர்கள் திக்கற்ற மாணவர் இல்லத்துக்கு நாற்பதாயிரம் ரூபாய் செலவில் கட்டித் தந்துள்ள புதிய மாடிக் கட்டிடத்தைத் திறந்து வைத்து நாட்டாரவர்களின் அறச் செயலைப் பாராட்டினார்கள். மாண்புமிகு டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் மணி விழாவிற்காகத் தமிழ்ப் பேரறிஞர்களின் இலக்கிய இலக்கண வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள் மட்டுமே அமைந்த ''கட்டுரைப் பொழில்'' என்ற இலக்கியத் தொகுப்பு மலரையும், விழாவிற்கான வாழ்த்துச் செய்திகள் சங்கச் சான்றோர் சிலரின் வரலாறுகள் முதலியன அடங்கிய சிறப்பு மலரையும் கல்வியமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள், சிறப்புரை யாற்றிய கல்வியமைச்சர் அவர்கள் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின் தமிழ்த்தொண்டினையும் சங்கம் செய்து வரும் பணிகளையும் பாராட்டிப் பேசினார்கள். இசைத்தமிழின் பெருமையை எடுத்து விளக்கும் தவததிரு விபுலானந்த அடிகளாரின் யாழ்நூலை மீண்டும் வெளியிடத் தமிழக அரசு உதவி புரிய வேண்டும் புலவர் க. வெள்ளைவாரணனாரும் முத்தமிழ்க் காவலரும் விடுத்த வேண்டுகோளை முறைப்படி கவனித்து உதவி செய்வதாக உறுதி கூறினார்கள். ''இசைத் தமிழ் வளர்ச்சி'' என்னும் தலைப்பில் வெள்ளைவாரணனாரும் ''கிருத்துவத் தமிழ் இலக்கியங்கள்'' என்னும் தலைப்பில் திரு. ரம்போலா மாசுகரேனசு எம் ஏ அவர்களும் சொற்பொழிவாற்றினர். கரந்தைத் திரு சண்முகவடிவு அவர்கள் யாழ்நூல் இரண்டாம் பதிப்பு வெளியிட ஆயிரத்தொரு வெண்பொற்காசுகள் நன்கொடை தருவதாகத் தெரிவித்துள்ள நற்செய்தி அறிவிக்கப்பட்டது பின்னர்த் திரு. க. வெள்ளைவாரணனர் அவர்களும் ஆயிரம் வெண்பொற்காசுகள் தம்

காணிக்கையாகத் தருவதாகத் தெரிவித்தார்கள் புலவர் கல்லூரி முதல்வர் நன்றி கூறியதும் சங்க வாழ்த்தும் நாட்டு வாழ்த்தும் பாடப்பெற்றன.

இரவு 10 மணியளவில் உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் நடித்த 'திருமலை நாயக்கர்' என்னும் நாடகம் சிறப்பாக நடைபெற்றது.

மூன்றும் நாள் நிகழ்ச்சிகள் 15—4—73 காலை 10 மணியளவில் தமிழின் வளர்ச்சி குறித்து ஆராய்வதற்காகக் கருத்தரங்கம் தொடங்கியது. சங்கத்தலைவர் யாவரையும் வரவேற்றார். உணவருந்துவதற்காக நண்பகல் 1 மணியளவில் நிறுத்தி வைக்கப்பட்ட கருத்தரங்கம் பிற்பகல் 2-45 மணியளவில் மீண்டும் தொடங்கி 4-45 மணி அளவில் நிறைவுற்றது. மதுரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன், எம். ஏ. அவர்கள் தலைமை வகித்தார்கள். தமிழ் வளர்ச்சிக் கழக இயக்குநர் கொண்டல் சு. மகாதேவன் எம். ஏ., பி. எ. சி. அவர்கள் "தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்" என்னும் தலைப்பிலும், "தென்மொழி" ஆசிரியர் பெருஞ்சித்திரன் அவர்கள் "இலக்கியத்துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகள் என்னும் தலைப்பிலும், மதுரைப் பல்கலைக் கழகத் துணைத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மோ. இசரயேல் அவர்கள் தமிழின் தனித்தன்மையையும் செம்மையையும் பாதுகாத்தற்குரிய ஆக்கப் பணிகள்" என்னும் தலைப்பிலும்; தஞ்சையில் உள்ள மன்னர் சரபோசி அரசினர் கலைக்கல்லூரிப் பொருளியல் துறைப் பேராசிரியர் அர. சேஷாசலம் எம். ஏ. அவர்கள் "நம் பணி" என்னும் தலைப்பிலும் தஞ்சை மருத்துவக் கல்லூரி உயிரியல் பேராசிரியர் ந. முத்துக்குமாரசாமி எம். ஏ. அவர்கள் "தமிழில் அறிவியல்" என்னும் தலைப்பிலும் கருத்துரை வழங்கினர். கருத்தரங்கில் கூறப்பெற்ற கருத்துரைகளுக்கு ஏற்ற மறுமொழிகளைக் கருத்தரங்கத் தலைவர் கூறினார்கள்

மாலை 5-15 மணியளவில் சொற்பொழிவு நிகழ்ச்சிக்காக மீண்டும் அவை கூடியது சங்கத்தலைவர் யாவரையும் வரவேற்றார். உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்

தலைமை தாங்கினார்கள். உரைவேந்தருக்குச் சங்க சார்பில் வாழ்த்திதழ் பாடியளிக்கப்பெற்றது. அருட்டிரு விபுலாநந்த அடிகள் படத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துணைப் பேராசிரியர் புலவர் க. வெள்ளைவாரணனார் அவர்கள் திறந்து வைத்து அடிகளாரின் தூய வாழ்வு பற்றியும் யாழ் நூலின் சிறப்புக் குறித்தும் சொற்பெருக்காற்றி, யாழ்நூல் வெளியீட்டுக்குத் துணைபுரியத்தாம் ஆயிரம் வெண்பொற்காசுகளை நன்கொடையாகத் தருவதாகக் கூறினார்கள். பின்னர் டாக்டர் சொ சிங்காரவேலன் "கலையும் கண்ணீரும்" என்னும் தலைப்பிலும், முதுபெரும் புலவர் ச. தண்டபாணி தேசிகர் "நாடகத் தமிழ்" என்னும் தலைப்பிலும், திரு. அ. ச. ஞானசம்பந்தன் எம் ஏ. "சேக்கிழார் காட்டும் தமிழ்ப்பண்பாடு" என்னும் தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். தலைவரின் முடிவுரைக்குப் பின் நன்றி கூறல், சங்க வாழ்த்து, நாட்டு வாழ்த்துடன் மணிவிழா இனிது நிறைவுற்றது.

இரவு 10 மணியளவில் பரதநாட்டியக் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. மணிவிழா நிகழ்ந்த 13, 14, 15–4–63 ஆகிய மூன்று நாட்களிலும் நூல்கள் கண்காட்சி மிகச்சிறப்பாக நடைபெற்றது. சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், நீயுசெஞ்சுரி நூல் வெளியீட்டகம், கலைக்கதிர் வெளியீட்டுத்துறை, தஞ்சை மன்னர் சரபோசி சரசுவதி மகால் நூல் நிலையம், கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஆகிய நிறுவனங்களின் வெளியீடுகள் கண்காட்சியில் வைக்கப்பெற்றுச் சிறப்பளித்தன.

மணி விழா நடைபெற்ற மூன்று நாட்களும் கரந்தையே திருவிழாக் கோலங்கொண்டு விளங்கிற்று. விழாவுக்கு வருகை தந்திருந்த யாவரும் தமிழமுதம் உண்டு மகிழ்ந்து தமிழுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்து முடிப்போம் என்ற உறுதி தோன்ற வீடு திரும்பினர்.

முத்தமிழ் முப்பது

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

க. பாட்டுப் பத்து.

1. மூத்த வுணர்வின் முதிர்வசைவால் உள்ளணுக்கள்
யாத்த வரியிசையே பாட்டு.

2 வல்லார் நினைத்த நினைவலைகள் வந்துறுத்தச்
சொல்லால் எதிரொலித்தல் பாட்டு

3. காற்றின் நுணித்தாய்க் கருத்தலைகள் உள்ளூறி
ஊற்றுப் பெருக்குவதே பாட்டு

4. கிடந்த வொழுங்கின் உணர்வலைகள் நெஞ்சில்
நடந்த வொழுங்கிசையே பாட்டு.

5 ஊன்றும் இறையொளிமூண் டுள்ளக் கனலெழுப்பத்
தோன்றும் உணர்வொலியே பாட்டு.

6. மூண்ட நெடுநினைவால் முற்று முளக்கனியைக்
கீண்ட வொலியூறறே பாட்டு

7. அண்ட வெளியொலியை ஆகத் தணுப்புகுத்தி
விண்ட வுணர்வொழுங்கே பாட்டு.

8 தோற்றம் நிலைப்பொடுக்கம் என்னுந் தொலையுணர்வின்
ஏற்றம் விளக்கொலியே பாட்டு.

9 அணுவை அணுத்துடிப்பை ஆன்ற வொளியின்
அணுவை ஒலியாக்கல் பாட்டு.

10. என்றும் இருப்ப தினியொன் றிருப்பதுபோல்
என்றும் இருப்பதே பாட்டு

உ. கூத்துப் பத்து

1. தானதுவா யெண்ண அதுதானே வந்துளொன்றி
ஊனணுவை உந்துவதே கூத்து.

2. புலம்பற்றி யுள்பற்றிப் பூதங்கள் பற்றித்
துலங்கசைவைத் தோற்றுவதே கூத்து.

3. கண்ணொளியை மெய்யொளிர்ப்பக் காதொலியை
வாயுதிர்ப்பத்
திண்ணணுவில் நெஞ்சாடல் கூத்து!

4. கோடி யணுத்திரளும் கூத்தன் உளக்கயிற்றில்
ஆடி யுணர்வியக்கல் கூத்து!

5. வாங்குணர்வை யேந்தி வழங்குணர்வால் காண்பார்க்குள்
ஓங்குணர்வைப் பாய்ச்சுவதே கூத்து.

6. அண்ட வியக்கத்தை ஆன்றணுக்கள் ஏற்றியங்கி
விண்டு விளக்குவதே கூத்து

7, நாடித் துடிப்புமுயிர் நற்றுடிப்பும் ஓரிசையுள்
ஓடித் துடிப்பெடுத்தல் கூத்து!

8. அணுவோ டணுமோதி யஃதிரண்டாய் விண்டுள்
உணர்ந்தாடி வீறுவதே கூத்து!

9. மின்னணுக்கள் வீழ மிளிரணுக்கள் தாமியங்கி
மன்னுணர்வை யாட்டுவதே கூத்து!

10 புதைத்த உளத்துணர்வைப் பொன்ரு வெளியுட்
சிதைக்கச் சிலிர்ப்பதுவே கூத்து!

௩. இயற்பத்து

1. நிற்றல் நிலைமாறல் நீடிசைத்தல் ஆடலெனக்
கற்றல் ஒடுங்கல் இயல்.

2. ஊன்றல் உணர்த்தல் ஒளியேற உள்ளாடி
ஆன்றல் அவிதல் இயல்

3. பிணைதல் பிளத்தல் பிறந்திசைத் தாடி
இணைதல் புதைதல் இயல்.

4 தோன்றல் துலங்கலொரு துண்ணணுவாய் மின்னியுளம்
நோன்றல் நுடங்கல் இயல்.

5. ஏறல் இணைந்தொளிர்தல் எண்ணிறந்து மாறியுயிர்
ஆறல் அடங்கல் இயல்.

6. பிறங்கல் புலனுயர்தல் பீடுணர்வால் ஆழ்ந்துள்
உறங்கல் ஒடுங்கல் இயல்.

7. பொங்கல் புணர்தல் பொதியுடம்பு விட்டவுயிர்
தொங்கல் துதைதல் இயல்.

8. சோம்பல் சுடர்தல் சுரப்பித்தல் உள்நிறைந்து
கூம்பல் குமைதல் இயல்.

9. விசைந்தேறி உள்விளங்கி விண்டவுயிர் சோர
இசைந்தாடி யொன்றல் இயல்.

10. எடுத்தல் இயங்கல் இசைந்தாடி உள்ளம்
படுத்தல் மடுத்தல் இயல்.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கம்பரின் வீரச்சுவை

(கொடைப் பகுதி)

திரு. K. சோமசுந்தரம், பி. ஏ. பி. எல்., தஞ்சை

நல்லுணர்வால் உந்தப்படும் ஆளுமை வளர்ச்சியினை எத்தகையவாறு, தமிழ் வீரமும் தமிழ்ப் பண்பாடும் நயத்தகு முறையில் காத்து வந்ததென்பதும், மற்றும் 'அடல்வேல் ஆடவர்க்கன்றியும் அவ்வில், மடவரல் மகளிர்க்கு மறம் மிகுத்தன்று' என்பதற்கு இலக்கியமாக, காவியத் தலைவியின் அறத்தோடிணைந்த மறத் திறனுடைய வீரவுணர்வின் இசைமையினையும் கம்பர் மொழிந்த வழி அறிந்த பின்னர், பெருமித நான்கினுள் கடையாயதாயுள்ள கொடையினைப் பற்றி அவர் கூறுவதைக் காண்குவம்.

கொடுத்தற்குரியதை, இடம், காலம், ஏற்பவர் தகுதிப்பாடு முதலாயவற்றைக் கருதிக் கைம்மாறு வேண்டாது, உலகம் தெய்வத் தன்மையிலோங்க, அருளின் நீரால் கொடுக்கும் கொடை, வள்ளல்களால் வழங்கப்படுவது. அஃது அறத்தின் ஒரு கூறு. கொடையால் இசைமைபட வாழ்தலைத் தவிர இவ்வுலகில் மக்களுயிர்க்கு வேறுபிற ஊதியமின்று. இதனை உணராது செல்வமுற்றோர், வறுமையால் இரப்பார்க்கு யாதொன்றும் கொடாது வாழின் அன்னார் தம் முன்னோர்களின் நல்வினையினை நன்கறியாதவராவர்.

'துன்னருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்
இன்மையின் இரப்போர்க்கு ஈயாமையின்
தொன்மை மாக்களின் தொடர்பு அறியலரே'

என்பது பெருந்தலைச் சாத்தனாரது பாவமுதம். எனவே, தம் மாலியன்றதை இல்லாதவர்க்கு ஈந்து நுகர்வதே இசைபடு வாழ்வாகும். 'அடுக்கிய மூவுலகமும் கேட்குமே, சான்றோர் உவந்து கொடுத்தார் எனப்படும் சொல்' என்பது முதுமொழியாகும்.

பெருமிதத்துடன் வாழ்தலுக்கு, கல்வி, தறுகண், இசைமை தகுந்த காரணங்களாக உளவாகினும் அவைகளின் மாணெழில் பசி வந்திடப் பறந்து போதலியல்பே, எனவே, பசியினை ஆற்

றுதல் தலை சிறந்த பேராற்றலாகும். மற்றும் பசியினை யொழிக்கத் தாராளமாகப் பொருளீகையே உயிர்ச் செல்வமாகும். எனவே பசியினைப் போக்கும் கொடை எக்காலத்தும் ஒரு தலையாகப் பொன்றாது நிற்பதினுன். அது, இசைபட பெருமிதத்துடன் வாழ்தற்குச் சிறந்த தாயிற்று. என்றும் புகழ்ஈவார் மேனிற்குமென்க. பெருமிதத்திற்கு அடிப்படையாய் வாய்ந்துள்ள அக்கொடை, கலைகளை வளர்க்கும் மாண்பும் பெற்றிமையுமுடையது. எதன் வழியாதாமொருவர் தன்னை அளிக்கின்ருரோ அஃதே சிறந்த கலையாகும். இகழ்ச்சிக்கிடனின்றி, கலை வழி நிகழ்வது கொடுப்பதும் கொள்வதுமென்பதும் உணரப்படல்வேண்டும். செல்வத்துப் பயன் ஈதல் எனும் வாக்கினை மெய்ப்பித்து அதனுன் பாராட்டப்பட்ட சடையப்பவள்ளல், கலை மவிந்த கம்பரால், தம் இராம காவியத்தில் 'ஆயிரத்தில் ஒருவர்' என்னும் பெருமைக் குரியரானதும் ஈண்டு ஓரோவழி உளங்கொளற்பாலது. மற்றும் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டதின் காரணமாகக். கம்பர், தமிழ்க் காவியக் கடலைக் கடைந்து மக்களுக்குத் தீஞ்சுவை அமுதமீந்தாராதலின் கம்பரும் கலை வள்ளலுமாயினுரென்பது உணர்ந்து இன்புறற்பாலது. எனவே, எவரொருவர் வரையாது கொடுக்கும் தன்மை மூலமாகத் தன்னையே அளிக்கிருரோ அவர் வள்ளல் எனும் அருமைப் பெயருக்குரிய வராவரென்பது பெறப்படும் உள்ளத்தையும் அருட் செல்வத்தையும் பொருட் செல்வத்தையும் சிறைப்படுத்தாது தமக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு ஈந்து மகிழும் பண்பு வள்ளல் பால் சிறந்து நிற்கு மென்க.

கம்பர் வில்லோசையில் வீரவுணர்ச்சிகளைத் தட்டியெழுப்ப வல்ல இராமரை 'வள்ளல்' என்றே பிற அடைமொழியொடு கூட்டிச் சுட்டாது. காவியத்தின் கண் பல இடங்களில் வழங்கியுள்ளது நோக்கற்குரியது. இராவணனை வதம் செய்யும் நோக்குடைய இராமருக்கு ஒப்புயர்வற்ற வள்ளற்றன்மை எங்ஙனம் வாய்க்குமென்பது முதற்கண் இறுப்பூது பயக்கும் பான்மைத் தாகும். ஓரறிவு முதல் ஆறறிவுடைய உயிர்களுக்கு அளவிறந்த அரிய பொருள்களை ஈந்து புகழ் பரப்பிய தமிழகத்து வள்ளல்களுக்கும் இல்லாத வள்ளற்றன்மையினை இராமர் உடையவரென்பது கம்பரது கருத்துரை. இக் கருத்துரை புனைந்துரையும் புகழுரையும் அன்றென்பதும், அஃது பொருளுரையே யென்பதும உள்ளற்பாலது. இராமர், வேண்டினுர்க்கு கொடைக் கடனிறுக்கும் அறமும், மனச் செம்மையும் அருளுமுடைய் ஒளியுடையாரென்பதைக் கம்பர் பலவாருகத் தம் காப்பியத்தில்

நாமறியச் செய்து அவரது அகப்புறத் தூய்மை பற்றிய வள்ளற்றன்மையினைப் பாட்டோவியமாகக் காட்டிய திறமும் சிறப்பிக்கும் முறையும் பாராட்டற்குரியவாகும்.

இசைபட வாழ்பவர் செல்வம் போலக் காண்டொறும் பெருமிதத்தோடு பொலியும் இராமரைக் கம்பர் கொடைக் கடன் பூண்ட கொற்றவராகக் கருதுகிறார். வள்ளலுக்குரிய மாண்புறுதற்கேதுவான ஒழுக்கப் பண்புகள் யாவும் இராமர்பால் ஒருங்கிருப்பதினால் அவரைக் கம்பர் 'கருணையினிலய மன்னன்' என்பர். இராமர், அகழ்வாரைத் தாங்கும் கருணை மல்கிய நிலம் போன்றுத் தன்னை இகழ்வாரையும் பொறுத்து அன்னவருக்கு அருளும் வள்ளல்: உடற்றுன்பமாகிய காம நோயினையும். உளத் துன்பமாகிய அறியாமையினையும் உயிர்த் துன்பமாகிய பாவத்தினையும் போக்கடிக்கும் புகழ் கொண்ட வள்ளல்: களை களைந்து நெற் பயிரைக் காப்பது போன்று இராவண வதத்தால், தேவர் சித்தர் முதலியோர் நலம்பெறுமாறு காத்தோம்புதலைத் தன் வாழ்க்கைப் பணியாகக் கொண்ட வள்ளல்: நற்றவம் தரும் ஞானத்தையுடைய விபீடணனுக்கு அருட் குரு வடிவாயிருந்து அவரது உள்ளத்தைக் குளிரவைத்து ஆழ்வாராக்கிய வள்ளல்: வாலிக்கு நல்லுணர்வு நல்கிப்பின் நல்லறிவை யூட்டி நல்வழிப்படுத்திய கிருபை வள்ளல்: அரக்க இயல்புடைய கும்பகருணன் இறக்கும் தருவாயில் அவன் இரந்து வேண்டிய வரத்தினையும் ஈந்து இன்பத்தைக் கொடுக்கும் எல்லையற்ற கருணை வள்ளல். எனவே, அயலார், நட்பினர், பகைவர், தக்கார், தகவிலர் என யாவர் மாட்டும் ஏற்றத் தாழ்வு கருதாது, தீ தின்றியும் தம் அறக்கோள் விடாதும், இணைந்தமைந்து நடுவு நிலைமையின் பாலதாய அந்தண்மையொடு, ஈகை வினைத் துறை நின்று இனிதொழுகும். இராமரைக் கம்பர் 'வள்ளல்' எனக் குறித்துள்ளது சாலவும் பொருத்தமுள்ளதெனத் துணிக.

நல்லொழுக்கமே தனக்கோர் வடிவெனக் கொண்ட இராமருக்கு மன நிறைவுடன் வாரி வழங்கும் வள்ளற்றன்மை இயல்பாகவே அமைந்துள்ளதைப் பற்றிக் கம்பர் பலவிடத்தும் மேம்படுத்தி அவரைத் தமிழ் வள்ளல்களில் மிக்குயர்ந்தவள்ளலாக வயங்கச் செய்து அவரை வாழும் மக்களுக்கு மிக்க எளியராக்கி ஆற்றுப் படுத்துகின்ற நயம் பெரிதும் போற்றற்பாலது: மற்றும் அவரது வள்ளற்றன்மையுடைய வாழ்வில் அவரை மக்களது தெய்வமாக்கினார். முக்கால வுணர்ச்சியுள்ள துனியுறு முனிவராய விசுவாமித்திரரின் சிந்தைக் கருத்தெல்லாம் நன்

கறிந்த இராமர் அவருக்கு வேள்விப் பயனை அளித்தார். வேள்விக்கு வேந்தராகிய இந்திரனுக்கு இராவணனால் அவன் இழந்த உலகினை மீண்டும் அளித்தார். ஒள்ளியது உணரும் நல்லாறுடைய விபீடணனுக்கு இலங்கையை அளித்தார். குரங்கினத் தலைவன் சுக்கிரீவனுக்குக் கிட்கிந்தையை அளித்தார். உரிமையாகப் பெற்ற அரசைத் தியாகம் செய்து, பரதனுக்குப் பாதுகையும் அரசும் ஈந்தளித்தார். சாபத்தால் கல்லுரு வெய்திய அகலிகையை நெஞ்சினாற் பிழைப்பிலாளென வுணர்ந்து அன்னவர்க்கு முன்னிருந்த உருவத்தை யளித்து அன்னவர் தம் பதியுடனும் சேர்ந்தார் விராதன், கவந்தன், வாலி முதலியவர்களுக்கு நிலையாய பேரின்ப வீடு பேற்றை அளித்தார்.

மனிதரில் சிறந்தோராய்த் திகழ்ந்து செயல்படும் இராமர், கொடை வள்ளலுக்குரிய பரந்த நோக்கமும் கனிந்த உள்ளமும் கொண்டவர். மக்களை சாதியாலும் பிறப்பாலும் உயர்வு தாழ்வு கருதாது உடன் பிறப்பு நோக்கொடு அன்பினாலும் அருளாலும் மனங் கலந்து உறவு பூண்டு வாழும் மாட்சியையும் பயனையும் பல வகைகளில் இராமர் எடுத்துக் காட்டியும் தம் வாழ்வில் நடத்திக் காட்டியும் வந்த வள்ளலாராவர். 'யாதும் ஊரே, யாவருங் கேளிர்' என்ற மனிதப் பண்பு ஒளி விட்டு மிளிர. தன்னை அடைக்கல மடைந்தாரைக் கொடை மடத்து மன நிகழ்ச்சியால அன்புடன் ஆதரித்துக் காக்கும் கடன்மையை தனக்கே பெருவழக்காய் உரியதாயுள்ளதை நடன் முறையில் இராமர் காட்டியது அனைவரானுங் கருத்திற் பதிக்கற்பாலதா யுள்ளது. உடன் பிறப்பு நோக்கின் பிறப்பிடமும் இருப்பிடமும் இவ்வள்ளல் பாலிருந்ததினன், இராமர் வேடனையும். குரங்கையும் அரக்கனையும் அன்புத் தனிவழி தம் உடன் பிறப்பினராக ஏற்றுக்கொண்ட உண்மை தேறப்படும் அறத்தின் நாயகராகிய இராகவ வள்ளல், அபயம் வேண்டி நின்ற வருணனுக்கு தஞ்சம் அளித்ததும் இவண் கருதற்பாலதே

அரிகுலத் தலைவன் இராமரிடம், 'சரண் உனைப்புகுந்தேன்: என்னைத் தாங்குதல் தருமம்' என்று கூறியபோது. துன்புற்றுரைக் கண்டு இரங்கும் உள்ளம் படைத்த வள்ளல்

> 'உன் தனக்குரிய இன்ப துன்பங்கள் உள்ள, முன்னாள்
> சென்றபோக: மேல்வந்து உறுவன தீர்ப்பல் அன்ன
> நின்றன, எனக்கும் நிற்குமநேர்.'

என உறுதி மொழி புகன்று. மேலும்,

'மற்று இனி உரைப்ப தென்னே வானிடை மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார்; தீயரே எனினும் உன்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார்; உன் கிளை எனது என் காதல்
சுற்றம் உன் சுற்றம், நீ என் இன்னுயிர்த் துணைவன்'

என்றார். இவ்வாறு பொருட் செறிவுள்ளதாக இராமர் கூறுவது, சாதி குலப் பிறப்பென்னும் சுழலில் மாசுபடாத மக்கட் பண்பிற்கு இலக்கியமாகத் திகழும் அவரது பெருமைசால் வள்ளற்றன்மைக்குத் தலையாய சான்றாகும் மற்றும் போர் முனையில், உடன் பிறப்பு நோக்கொடு இராவணனுக்குக் கும்ப கருணன் ஒற்றுமையாக நின்று உற்றுழி உதவிய இயல்பினையும் வீரத்தையும் உணர்ந்து. அவன் தனியனாய், பெருஞ் செவியிழந்து மூக்கிலா முகத்தோடு நின்றதைக் கண்டு வியப்புற்ற இராமர், பெருங் கொடை வள்ளலாக வயங்கி.

'ஏதியோடு எதிர்பெருந்துணை இழந்தனை எதிரொரு தனிநின்றாய்
நீதியோடன் பிறந்தனை யாதலின் நின்னுயிர் நினக்கு ஈவன்'

என மொழிந்து தன் வள்ளற்றன்மைக்கு உயிர்ப் பூட்டியது பெரிதும் அறிந்து இன்புறற்பாலது. கும்பகருணன் தன்னுயிருக்காக யாதும் வேண்டிலானாகி, தன் மானத்தையும் வீரத்தையும் காக்க, தன் தலையைக் கடலுள் வீழ்த்தும்படி இராமர் பால் வேண்டுகோள் விடுத்தான்.

மூக்கிலா முகமென்று முனிவர்களும் அமரர்களும்
நோக்குவார் நோக்காமை நுன்கணையால் என்கழுத்தை
நீக்குவாய் நீக்கியபின் நெடுந்தலையைக் கருங்கடலுள்
போக்குவாய் இதுநின்னை வேண்டுகின்ற பொருள் என்றான்.

கும்பகருணனது மானத்தைக் காப்பாற்றும் நோக்கோடு அவன் இறுதியில் விரும்பிய வரத்தை மறுத்தல் முறையன்றென இராமர் இணங்கி, அவன் கருதி விரும்பும் புகழையும் நிலை நிறுத்தினார் கும்பகருணனோடு உடன் பிறந்தானாகிய விபீடணனையும் இராமர் தன்னுடன் பிறந்தாராகத் தன் கருணையினால்

ஏற்றுக் கொண்டது அவர் தம் வள்ளற்றன்மையின் உயர் நிலையினைக் குறிக்கும். கொடையில் சார்ந்திருக்கும் இராமரது மனப் பான்மையின் விழுப்பம், தாய்மையிலும் நட்பிலும் தழுவி நிற்பது வியந்து புகழ்தற்குரியது.

வில்லில்வல்ல வீரராய இராமர், பிறருக்கு உதவத் தூண்டும் அருளுடைமையிலும், வரையாது கொடுக்கும் வள்ளற்றன்மையிலும் மிக்கவரென்றும் கருத்தைக் கம்பர் தம் காவியத்தில் அமைத்து வழங்குங் கிளர்ச்சியும் இன்பமும் மிகப் பெரிது. வரையாவீகை, உரவோர் பால் சிறந்த பெருமிதமாக மிளிர்தல் இயல்பு இத்தகைய பெருமிதத்திற்கு அடிப்படையாக அமைவது அன்பு. அன்பென்ப தொன்றன் தன்மை, அமரரும் அறிந்த தன்றால்' என்பது கம்பர் வாக்கு. காட்டலாகாப் பொருளாய இத்தகைய அன்பு பண்பட்ட வாழ்வின் கூறுகளாகிய வீரம் காதல் மூலமாக இரக்க இயல்புடன் சிறப்பாய் வளர்ச்சி யெய்தி முடிவில் கருணை, கொடை நலமெனும் அணிகலங்களுடன் வாகை கொள்ளும். பொதுவாக இரக்க இயல்பு செருக்களத்தே மெய்ஞ் ஞானமாய் மலர்ந்து பகைவனுக்கும் கருணை பொழிந்து வேண்டியவை ஈந்து அருளும் பெருமிதப் பண்பினை நல்கும். கார்நிகர் வண்கைக் கன்னன்; செருமுனையிலே அருச்சுனன் விடுத்த அம்பினால் அறிவிழந்து அசைவற்றிருந்த போது தன்பால் முதிய வேதியராக வடிவு கொண்டு இரந்து வந்த மாய முகுந்தனுக்கு,

ஆவியோ நிலையில் கலங்கியது யாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவந் தன்னில் வந்திலையால்

என, கைசுருங்கிய காலத்தும் மனஞ் சுருங்காத நிலையில் சொல்லும்படியாகவும் நேரிட்டது. பகைவரை அன்பாலும் இரக்கத்தாலும் வெல்லும் இராமர், கொடையிற் சிறந்த கன்னனைவிட மேம்பட்டவரென்று கம்பரின் கூற்றால் தெளியப்படும். படையின்றி, வீரத்தைப் போர்க்களத்தினிலே போட்டு வெறுங் கையனாய் தன் முன் எதிர்ப்பட்ட இராவணனுக்கு இனியனாகி இராமர் 'அரக்கரை ஆளும் ஐய! இன்று போய் நாளை படையுடன் வா' என, ஆறாப் பகைக் கனலை அவித்துக் கூறியுள்ளதைக் கூர்ந்து சிந்திக்கின், அது நினைவார் நினைதொறும், தன்னையே அளிக்கும் இராமரது கொடை வீரம் பற்றியெழும்

பெருமிதம், நிலைக்கு நிலை உயர்வுகொள்ளும்படி அவர் நடந்து கொண்ட வள்ளற்றன்மையினைத் தெளிவாக்குகின்றது. இராம ரது கொடை மடம் பற்றிய வள்ளற்றன்மை பேரருளுடன் அறங் கனிந்து கருணை நிலையில் வீரச் சிறப்புக் கொண்டு தோன்றியுள் ளதைக் கம்பர்,

'ஆளையாவுனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளையாயின கண்டனை இன்று போய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன், நாகிளங்கமுகின்
வாளைதாவுறு கோசல நாடுடைய வள்ளல்'

என எளிமையும் இனிமையும் பயப்ப மொழிந்து இப்பாவி னிலே ஆழமுடைமையினைப் பற்றிய நுட்பத்து நெறியையும் விளக்கியுள்ளார்.

ஈண்டுக்கம்பர் 'கோசல நாடுடையவள்ளல்' எனக்கையாண்ட சுவைகனிந்த தமிழ்த் தொடரின் இனிமை, பெருமிதத்தைப் புலப்படுத்தும் பெற்றிமையினையுடையது. மேலும் அது பொருள் வழிச் சொற்பரந்து கனியும் விழுநிலையினையும் தெளிவிக்கும் பான்மைத்து. கோசல நாடு நீடு புகழ்கொண்ட அந்த மில் வளங்குலவும் நாடு. அக் கோசல நாடுடைய வள்ளலாகிய இராமர், ஐவகை மரபின் அரசர் வகுப்பினராவர். கோசல நாட்டு மக்கள், பெருமித முடையாரென்றும், அதற்குரிய கல்வி, தறுகண், இசைமை கொடை அவர்கள் பால் நிறைந்துள்ள தென்றும்

'வண்மை யில்லையோர் வறுமை இன்மையால்
திண்மை யில்லைநேர் செறுநர் இன்மையால்
உண்மை யில்லை உரை யிலாமையால்
ஒண்மை யில்லை பல கல்விமேவலால்'

என்ற கம்பர் வாக்கால் நுனித்தறியப்படும் இப்பாட்டின் நான்கு அடிகளிலும் பெருமிதச் சுவைக்கு நிலைக்களமாகயுள்ள கொடை, தறுகண், இசைமை, கல்வி ஆகியவற்றைப் பற்றி முறையே குறிப்பிட்டிருப்பது உணரத் தக்கது மற்றும் இதன்கண் திறம்பட குறிப்பிட்டுள்ள பெருமிதம் நான்கினையும் நீடு நினைந்து இன்புறுதலுக்கேற்ற பொருட் செறிவு வாய்க்கப்பட்டி ருத்தலை ஊன்றி நோக்கி உன்னற்பாற்று. கோசல நாட்டு மக்களே பெருமிதம் நான்கும் கொண்டவரெனப் புகழப்படுத லால், அந்நாட்டின் வள்ளலைப்பற்றி மிகைப்பட சொல்லலும்

வேண்டுமோ ? மாசற்ற மனத்தில் விளங்கும் பெருமிதத்தையே தனக்கோர் வடிவெனக் கொண்டுள்ள அவ்வள்ளல், வெள்ளக் கருணை பொழிந்து மோனம் நிறைந்திடும் கொடை வீரர். இவர் இடையருது பெருமித வுணர்வுடன் கொடை புரிவதால் வரும் இசைமை காரணத்தை மகிழார். அவர் குறிப்பறிந்து கொடையினை மருது வழிங்குந்தோறும், தான் மாவள்ளிய ரென்பதையும் ஓரார். வள்ளன்மையோடு இன்னணம் மன்னு யிரோப்பி இராமர் கொள்வார் வாழக் கொடுத்தமையான், தல்லியல்புடைய கொடை வீரம் பொன் மலராய்ப் புகழொடு இவரால் பெருமிதமெய்தியது. அதனுன் அவரது கொடைப் புகழ் பொன்ருது நீடித்து நிற்பதும் போற்றத்தக்கதாகும்.

கல்வி, தறுகண். இசைமை, கொடையெனச் சொல்லப்பட்ட பெருமிதத்து நான்கு சிறப்புகளும், வாழ்வின் முடிந்த குறிக் கோளெனக் கொண்டு, கம்பர், தம் வீர காவியத்தில் அவற்றை நிலைக்களப் பொருளாகப் பொருந்துமாறு செய்து. காப்பிய எழிலை, மகிழ்ச்சி தரும் புத்தம் புதிய முறையில் படைத்துள் ளார். மற்றும் அவை, தமிழ் நாட்டிற்கும் தமிழர்க்குமேயுரிய தெனவும் நாட்டியுள்ளார். பெருமிதம் தருவனவற்றைக் கம்பர் வீரச் சுவைபடத் தம்முள்ளத்தே ஊடுருவி நிற்க நிலைநிறுத்தி, பின் ஆண்மையினைப் புத்துணர்ச்சியுடன் விளைவிக்க அவை களைப் பல்வேறு அழகுப் பாங்குடன் காவியத்தில் உயிர்ப்புடன் இயங்க ஒளிருமாறு அமைத்துள்ளார். இவ்வாறு பெருமிதம் நான்கினையும் வியத்தகு மூறையில் விருத்தப் பாக்களில் சுவை யாகத் தோய்த்து. சிந்தைக்கும் இனியதாகுமாறு இலக்கிய நயமனைத்தும் செவியார இழைய விடுவது கம்பரது சீரிய இயல்பாகும் வாழ்விற்கு உகந்த ஏற்றமார் கருத்துக்களையும், உயிர்த் தத்துவத்தையும், கண்ணோட்டத்திற்குரிய வீர மாண் பினையும், காப்பிய மாந்தர்களின் வாயிலாகவும், அன்னவர் களது நற்குண நற்செயல்களின் மூலமாகவும், கம்பர், மெய்ப் பாடு தோறும் அழகுடன் தெளிவுறுத்தியுள்ளார். மற்றும் காப்பியத்தில் படிந்தாரை பெரு மிதத்தோடு செயற்படுத்தும் முறையில், வீரச் சுவை மலிந்த போர் நிகழ்ச்சிகளை நேரிற் காண்பது போல் காட்சியளித்து அறத்தோடு. நல்லது தீயது யாதெனத் தெளியும் நல்லறிவினையும் ஒழுக்க நலனையும். தழிஞ்சி. துணை வஞ்சி என்ற துறைகளின் வழி, இன்புறும் நெறியில் புகட்டியுள்ளார். இதனுற்ருன் வீரச் சுவையினைப் புலப்படுத் தும் கம்பரது பாக்களின் வளத்தினை, கலைக் கண்கொண்டு உற்று நோக்கி உரைக்கப்புகின் அது வாய்மடுக்குந் தெள்ள முதின் தீஞ்சுவையு மொவ்வாதென்பர். ஐயப்படாது அகத்தது உணரும் திறவோர்.

உரையனுபவம்

(சித்தாந்த கலாநிதி உரைவேந்தர்
ஔவை சு. துரைசாமிப் பிள்ளை)

தமது தமிழ் மொழிக்குப் பெருமை தருகின்ற நூல்களில் தொல்காப்பியம், திருக்குறள் என்ற இரண்டு நூல்களும் தலை சிறந்தனவாகும். அவற்றுள், தொல்காப்பியம் எழுத்தும் சொல்லும் பொருளுமாகிய மூவகை நெறியில் தமிழருடைய எழுத்தும் சொல்லும் உணர்வும், ஒழுக்கமும், வாழ்வும், பண்பாடும், பிறவும் உரைக்கின்றது. திருக்குறள் தமிழரிடை நிலவிய அறமும், பொருளும், இன்பமுமாகிய நினைவு—சொல்லும் செயலுமாகிய கூறுகளைக் குறட்பாக்களால் உரைக்கின்றது. அதற்கு உரைகண்ட ஆசிரியர் பலர் அவர்களில் நுண்மாண் நுழைபுலச் செல்வராய், தமிழ் மரபோடு வடநூல் மரபும் நன்குணர்ந்த தமிழ்ச் சான்றோராய் விளங்கியவர் பரிமேலழகர். அவர் திருக்குறளுக்கு எழுதியுள்ள உரை தனிப்பெரும் நூலாகப் பயிலத் தக்க பண்பு அமைந்தது. தமிழில் மேன்மையான நூல்கள் எனச் சிலவற்றை நானூறு, ஐந்நூறு ஆண்டுகட்கு முன் ஒரு பெரியவர் ஆராய்ந்து தொகுத்துக் கூறினர் அவர் இன்னர் என்று திட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆயினும், அவர் உரைத்தது வெண்பா வடிவில் இருக்கிறது.

> "வள்ளுவர் மெய் யன்பர்மொழி வாசகம் தொல்காப்பியமே
> தெள்ளு பரிமேலழகர் செய்த உரை — ஒள்ளியசீர்த்
> தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
> தண்டமிழின் மேலாம் தரம்"

என்பது அவ்வெண்பா. இவ்வெண்பாவை நோக்குமின்; திருக்குறள், தொல்காப்பியம், தொண்டர் புராணம் எனப் பல நூற்களைத் தொகுத்த அந்தப் பெரியவர், அவற்றிற்கு ஒப்பாகப் பரிமேலழகர் உரையையும் நிறுத்தி உரைப்பது, பரிமேலழகர் உரைக்குப் பழங்காலப் புலவர் பெருமக்கள் எத்தகைய மதிப்பு வைத்திருந்தனர் என்று நமக்கு அறிவிக்கின்றது.

மேலும், பரிமேலழகர் சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகையுள் ஒன்றாகிய பரிபாடலுக்கும் உரை எழுதியிருக்கிறார் என்றாலும் அது திருக்குறள் உரை போல வளமும், வனப்பும், திட்பமும், நுட்பமும் செறிந்தில்லை அதனால் அந்த உரை பரிமேலழகர்

உரைதானே? என்று ஐயுறுவாரும் உண்டு. நிலைமை இப்படி இருப்பதால் தான் பரிமேலழகர் உரை என்றால் யாவரும் திருக்குறள் உரை ஒன்றையே நினைக்கிறார்கள் — இந்த வெண் பாவில் 'தெள்ளு பரிமேலழகர் செய்த உரை" என்பது திருக் குறளுக்கு அவர் எழுதிய உரையையே என்று பலரும் சொல் கிறார்கள். இத்தகைய சிறப்போடு விளங்குவதால்தான் பரிமே லழகர் உரையின் அழகு காண்பதில் அறிஞர்களுக்குப் பெரும் விருப்பம் உண்டாயிற்று

அதனை நோக்குவோம்: "செவிக் குணவு இல்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்" என்பது ஒரு திருக்குறள். செவிக் குணவாகிய நல்ல அறிவுடைக் கருத்துக்களைக் கேட்கும் வாய்ப்பில்லாத போது, வயிற்றுக்கு உணவு தரவேண்டும் என்பது இதன் பொருள். இதற்குப் பரிமேலழகர் செவிக் குணவாகிய கேள்வி யில்லாத பொழுது வயிற்றுக்கும் சிறிது உணவு இடப்படும் என்று உரை கூறுகின்றார்.

இனி இந்த உரையிற் கருத்தைப் புகுத்திப் பரிமேலழகர் அழகு செய்வதைக் காண்போம். திருவள்ளுவர் செவிக்குணவு என்பது எதனை? செவிக் குணவாவது கேள்வி என்று சொல்லு கிறார் திருவள்ளுவர். செவிக்குணவு இல்லாதபோது வயிற் றுக்குத் தரப்படும் என்றால், செவிக்குணவு இருக்கும்போது வயிற்றுக்கு உணவு தரப்படாது என்று தெரிகிறது. உணவு எனப்படுவதால் செவிக்குணவு போல வயிற்றுணவும் யாவருக் கும் வேண்டத்தக்கது; செவிககுணவு தந்து கொண்டே வயிற்றுணவு கொண்டாலென் எனின், வயிற்றுணவினும் செவிக் குணவு சுவைமிகுந்தது ஆகையால், இரண்டையும் சமமாக்கு ளதற்குப் பரிமேலழகருக்கு விருப்பம் இல்லை. அவர் வயிற் றுணவை விடச் செவி உணவு சிறந்தது என்பாராய்ச் "சுவை மிகுதியும் பிற் பயத்தலுமுடையது கேள்வி; அது உள்ள பொழுது வயிற்றுணவு அறிஞர்களால் விரும்பப்படாது ஒழி கிறது என்று பரிமேலழகர் கண்டு, இதனால் தான் திருவள்ளுவர் செவிக்குணவு இல்லாத போது வயிற்றுக்கு உணவு தரப்படும் என்றார் எனக் குறிக்கின்றார். இனி, செவிக்குணவு இல்லாத போது தரப்படும் வயிற்றுணவையும் "சிறிது" ஈயப்படும் என்பது எவ்வாறு பொருந்தும் என்று ஒரு கேள்வியை மாணவன் பரிமேலழகரிடம் கேட்கிறான். அதற்கு விடை கூறும் பரிமேலழகர், வயிற்றுணவு மிகுமானால் இடையூறு உண்டாகும் என்று நினைக்கிறார். ஆகவே, அவர் வயிற்றுணவு பெரியதாய வழி — வயிற்றுணவு மிகுமானால் — அது நோயும், காமமும்

விளைவித்தலின் திருவள்ளுவர் ' சிறிது'' என்பதுதான் பொருத்தம் என்று பரிமேலழகர் கூறுகிறார். இது கேட்ட மாணவன் ''சிறிது'' என்பது ஏன்? சிறிதும் இல்லையானால் நோய் முதலியன குறையும் அல்லவா? என்று வினவுகிறான் அவனுக்குப் பரிமேலழகர் விளக்கம் தருகிறார். ''அது தானும் பின்னிருந்து கேட்டற் பொருட்டு'' என்று சொல்லுகிறார். பினனிருந்து கேட்டற் பொருட்டு என்பதாயின். அவ்வாறு கேட்பதற்குரிய வலிமையும். தெளிவும் தருவது வயிறு. அவ்வயிற்றிற்குத் தருகின்ற உணவை இழிந்தோர்க்குச் சொல்வதுபோல ''ஈயப்படும்'' என்று சொல்வது பொருத்தமா? என மாணவன் கேள்வி கேட்கிறான். இக் கேள்வியை நினைத்துப் பார்த்த பரிமேலழகர் அது பொருத்தம்தான் என்பாராய், ''ஈதல் வயிற்றது இழிவு தோன்ற நின்றது'' என்று கூறுகிறார். அது எவ்வாறு பொருந்தும் என்றால், உணவு மிகுமானால் வயிறு காமமும். நோயும் உண்டு பண்ணுவதால்தான் ''ஈயப்படும்'' என்று சொல்லுதல் பொருந்தும் என்கிறார்.

இவ்வாறு ஒவ்வொரு குறட்பாவுக்கும் அழகொழுகத் தருக்க நெறியில் உரை எழுதும் பரிமேலழகர் கி பி- 13-ம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தைச் சூழவுள்ள நாட்டில் வாழ்ந்தவர், அவர் காலத்தில் மூன்றும் இராசராசனும், மூன்றும் இராசேந்திரனும் சோழ நாட்டை ஆண்டனர், திக்கன் என்ற விசயகண்ட கோபாலன் காஞ்சிபுரப் பகுதியில் நாடு காவல் புரிந்தான். அந்நாளில் வாழ்ந்தவர் பரிமேலழகர், திரிபுவனச் சோழனை ஆணைமேலழகர், (கல். IV. 852) நச்சினார்க்கினியர் வண்டுவரைப் பெருமாளான பரிமேலழகர் (கல் IV 854) முதலிய சான்றோரின் தூய தமிழ்ப் பெயர்கள் பின்னாளில் மறைந்து வீழ்ந்தன. அவ்வீழ்ச்சி நீர்வளமும், நிலவளமும் பொருந்திய ஊர்கள் சதுர்வேதி மங்கலங்களாக மாறி, பின்னர் அனைத்தும் மறைந்த வரலாற்றோடு ஒத்த தனி வரலாறு ஆகும்.

இப் பரிமேலழகர் திருக்குறட்கு எழுதியுள்ள உரை மிகவும் சிறந்ததெனத் தமிழறிஞர் அனைவரும் ஒரு முகமாகப் பாராட்டுகின்றார்கள். பரிமேலழகருக்கு முன்னும் பின்னும் தமிழ்ப் புலவர்கள் தோன்றித் திருக்குறட்கு உரை கண்டாரேனும், பொது வகையில் நோக்கினால் பரிமேலழகர் உரைத்த உரைக்கு ஒப்பாகவோ. உயர்வாகவோ உரை எழுதினோர் இல்லை என்று கூறுவது மரபு. இதனை வற்புறுத்துவது போல், ''பாவெல்லாம் நல்லாவின் பாலாமோ, பாரிலுள்ள நூலெல்

லாம் வள்ளுவர் செய் நூலாமோ — நூலில், பரித்தவுரை எல்லாம் பரிமேலழகன், தெரித்தவுரையாமோ தெளி'' என்றொரு பழம் பாட்டு நாட்டில் நிலவுகிறது அன்றியும், பரிமேலழகர் உரையைத் தழுவியும், ஒற்றியும் எழுதின உரைகளை அறிஞர்கள் மேற்கொண்டதோடு வேறுபட்டும் மாறுபட்டும் செய்த உரைகளை ஏலாது ஒழிந்தமையே ஒரு சான்றாகும்.

பழந்தமிழ் நூல்கட்கு உரை காண்பது. படிப்பிப்போர். நூல்களைப் பிறர் படித்துப் பொருள் விளங்கிக் கொள்ளுமாறு செய்யும் செயல் வகையில் ஒன்று, அருஞ் சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும் பொருள் உரைத்தலும், அவற்றிற்குப் பொழிப்புரைத்தலும் ஒரு வகை. அவற்றுள் முதல் வகையை அரும்பதவுரை என்றும், கண்ணழித்துரை என்றும், பதவுரை என்றும், பின்னதைப் பொழிப்புரை என்றும் கூறுவர். உரைக்கப்பட்ட உரையின்கண் அடங்கிய கருத்துக்களை வினா—விடை வாயிலாக விளக்கி நூலாசிரியர் உள்ளக்கிடையை அறிவாராய்ச்சி நெறியில் தெளிய உரைத்தலும் ஒரு வகை. இன்றுள்ள, தொல்காப்பியம் முதலிய இலக்கணங்கட்கும் இலக்கியங்கட்கும் உரைகாரர் தோன்றி, உரையெழுதியது சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு உள்ளேதான் என்று கூற வேண்டும் அதற்கு முன்னே நிலவிய உரைகளைப் பற்றி ஒன்றும் அறிய முடியவில்லை எனினும், இறையனார் களவியலுக்கு நக்கீரர் கண்ட உரை பழமை வாய்ந்தது. அதனையும் தொல்காப்பியம், திருக்குறள் முதலிய நூல் உரைகளையும் ஒப்பவைத்து நோக்கும்போது உரைகாரர் வழி வழியாக மேற்கொண்டிருந்த மரபு ஒன்று வெளிப்படுகிறது. எடுத்தோத்து, இலேசு, உத்தி என்ற மூன்று நெறிகளால் மேற்கொண்ட இலக்கண இலக்கியங்கட்கு உரை காண்பது அம்மரபு. அம்மரபு, பிற்கால நூல்களான நன்னூல், நேமிநாதம், யாப்பருங்கலம் முதலிய இலக்கண நூல் உரைகளில் மேற் கொள்ளப் பெற்றிருக்கிறதேயன்றி, இலக்கியங்கட்கு எழுதிய உரைகளில் தெளிவாகக் காணப்படுவதில்லை. பழைய உரை முறையே மறவாது கடைப்பிடித்த தொன்றே, பரிமேலழகர்க்குத் தனிச் சிறப்பையும் அவர் உரைக்கு அழகையும் தருகிறது

எடுத்தோத்து, இலேசு, உத்தி என்ற மூன்றாலும் பொருள் காணும் மரபு. நூலாசிரியன் உள்ளக் கருத்தை ஆழ அகழ்ந்து கண்டு, அறிவு நெறியால் ஆராய்ந்து உரைக்கும் மாண்பும், அருமையும் அமைந்ததாகும். மேற் போக்காக நுனிப்புல்

மேயும் விலங்கு நோக்கம் இந்நாளில் வேற்றுமொழிப் பயிற்சியால் மக்களிடையே பெரிதும் பரவி இருக்கிறது. அன்றியும், கல்வியின் நோக்கம், அறிவும், ஒழுக்கமும் பெறுவது என்பதைக் கைவிட்டு, ஏலாதன செய்தேனும் வயிறு வளர்ப்பது என்பது கொள்கையாக மாறியதனால், இவ்விழி நிலை உண்டாயிற்று இக்கருத்துடையாரே வழி வழியாக வாழ்வியல் தலைவர்களாக வந்தமையால், இந் நிலைமை மேன் மேலும் ஆதரவு பெற்று வளர்ந்து வருகிறது. நூலாசிரியர் கூறும் கருத்துக்களை, "ஏன்? எப்படி?" என எழும் வினா விடைகளால் நுண்ணறிவு கொண்டு தூய்மை செய்து கொள்வது உயர்நிலை மாணவர் கல்வி முறையிலேயே கைவிடப்பட்டுள்ளது. அதனால், கல்வி பயில்வோரிடையே காரண, காரிய முறையில் ஆராய்ந்து உண்மை காணும் பயிற்சி தேய்ந்து போயிற்று. பரிமேலழகர் ஒருவரே, அதனை ஓரளவு விடாது கடைபிடித்து உண்மை உரை காண்பதில் பெரிதும் முயன்று வெற்றி பெற்றுள்ளார். எனினும், அவர் வேற்று மொழி மரபும், தமிழ் மரபும் வேறு வேறு இயல்பின என உணர்ந்தும், வாதனை வயத்தால் சில பல குறட்பாக்களில் குழறுபடை செய்து குற்றப்படுகிறார். ஆனாலும், அது பற்றி அவரது உரை மாண்பும் அழகும் குன்றுவதில்லை.

எடுத்தோத்து என்பது எடுத்து ஓதப்படும் பாட்டும் அதன் கருத்துமாகும். இதனை எடுத்துரை என்பதும் வழக்கம். பொறுப்பவர்க்குப் புகழுண்டாகும்: பொருது ஒறுப்பவர்க்கு ஒரு நாளை இன்பமேயாம் என்ற கருத்தை,

'ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

என்ற குறட்பா எடுத்துரைக்கின்றது அதனால், இது எடுத்தோத்து அல்லது எடுத்துரை ஆகும் இங்ஙனம் எடுத்தோதப்படும் உரையில் "ஒரு நாளை இன்பம்" என்பதும் "பொன்றுந் துணையும் புகழ்" என்பதும் விளக்கப்பட வேண்டுவன அதனை விளக்கும் பரிமேலழகர், ' ஒரு நாளை இன்பம், அந்நாள் ஒன்றினும் கருதியது முடித்தேம் எனத் தருக்கியிருக்கும் பொய்யின்பம்" என்று கூறுகிறார். 'பொன்றுந் துணையும் புகழ்" என்பதில் பொன்றுதல், இறத்தல்: பொறுத்தார்க்கு இறக்கும் துணையும் புகழ் என்பது கருத்தாய்ப் பொருள் குற்றமாகிறது; புகழ் நிற்குமிடம் உலகமே தவிர புகழைச் செய்பவரல்ல:

அவர் இறந்து போனாலும் புகழ் இறந்து போவதில்லை இதனை விளக்குதற்குப் பரிமேலழகர் ஒரு சூழ்ச்சி செய்கிறார். புகழுக்கு ஆதாரம் உலகம் என்று காட்டி, "ஆதாரமாகிய உலகம் பொன்றப் புகழும் பொன்றுமாகலின். ஏற்புடைய உலகம் என்னும் சொல் வருவித்துரைக்கப்பட்டது" என உரைத்து, "பொறுத்தார்க்கு உலகம் அழியும் வரைப் புகழ் நிற்கும்" எனக் குறட்பாவின் எடுத்துரையை விளக்கம் செய்கிறார். எடுத்துரை, விதியும் விலக்குமென இரண்டாகப் பிரிந்து, பொதுவும் சிறப்பும் என வகைப்பட்டு, எய்தாதது எய்துவிப்பது, எய்தியது விலக்குவது எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுவது, எய்தியது விலக்கிப் பிறிது வகுப்பது. எய்தியது இகந்து படாமைக் காப்பது எனப் பல கூறுகளாகப் பிரிந்து செல்வது "விதியெல்லாம் எய்தாததனை எய்துவிப்பதும். ஒருகால் எய்தி ஒருகால் எய்தாதாகற்பாலதனை அவ்வழியும் இகந்து படாமற் காத்து நியயமாக எய்துவிப்பதும், ஈரிடத்து எய்தற்பாலதனை ஒரு மருங்கு மறுப்பதும் என மூவகைப்படும்" என மாதவச் சிவஞான முனிவர் முதலாயினோர் கூறுவர்: அவற்றைக் கருத்திற் கொண்டுரைப்பது, (உரை காண்பது) உரைகாரர் மரபு: ஆயினும் அவற்றை விரித்துரைப்பதற்கு இங்கு இடம் இல்லை

இலேசு என்பது எடுத்துரைக்கும் கூற்றில் வேண்டாத சொற்களைப் பெய்தலும், வேண்டுவதைத் தொகவைத்தலும். முறை பிறழ்ந்து உரைத்தலும் எனப் பலதிறமாக வரும். அவற்றால், பாட்டைப் பாடும் புலவற்கு உள்ளத்தில ஒரு குறிப்பு உண்டு: அது ஆராய்து காணத் தக்கது என்பது இலேசின் குறிக்கோள்.

"ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்"

என்ற குறட்பா நல்லொழுக்க முடையவர்க்குத் தீய சொற்களைச் சொல்வதென்பது ஆகாத தொன்று என உரைக்கின்றது. தீய சொற்களைச் சொல்வதைத் "தீய வாயாற் சொலல்" எனத் திருவள்ளுவர் கூறுகின்றார் "தீய சொலல்" என்றாலே தீய சொற்களை வாயினாற் சொல்லுதல் என்று பொருள்பட நிற்பதால். "வாய்" என்ற சொல் இலேசு. இந்த இலேசினால் திருவள்ளுவருடைய உள்ளக் குறிப்பு யாது? எனக் காணலுற்று "வாயாற் சொலல்" என்றல் ஏன்? எனக் கடாவிக் கொண்டு

"வாய் என வேண்டாது கூறினர். நல்லசொற்கள் பயின்றது எனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு" என உரைக்கின்றார். இலேசினால் பொருள் கொள்ளப்படும் இம்முறை வட மொழியிலும் உண்டு என அறிவிக்க "இதனை வட நூலார் தாற்பரியம்" என்று கூறுவர் எனப் பரிமேலழகர் உரைக்கின்றார்.

உத்தி என்பது நூல் உரைக்கும் ஆசிரியன் கைக்கொள்ளும் அறிவு நெறி. அறிவுப் பெருக்கத்துக்கும் நுண்மைக்கும் ஏற்ப அது விரிந்து செல்லும் என்று இலக்கணப் புலவர் இயம்புவர். ஊழ் என்ற பகுதியில்,

"நல்லவை யெல்லாஅம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு"

என்ற குறட்பா வருகிறது இதனைக் கிடந்தபடியே கொள்ளின் இக்குறட்பா செல்வம் பெற முயல்பவர்க்கு நல்லவை தீயவையாம், தீயவை நல்லவையாகும் என்று பொருள் பட்டுத் தெளிவில்லாமல் கெடுகிறது. இது எடுத்தோத்து, இலேசு என்ற இரண்டாலும் விளக்கம் பெறாமல் உத்தியை நாடி நிற்கிறது. "அதிகார முறை" என்ற உத்தியால் தீயூழ் வயப்பட்டார் செல்வம் செய்யுங்கால் நல்லவை யெல்லாம் தீமையாய் முடியும்; நல்லூழ் உற்ற போதில், தீயவை செயினும் நல்லவையாய்ச் செல்வம் எய்துவிக்கும் என உரை செய்யப்படுகிறது.

இவ்வாறு எடுத்துரை. இலேசு, உத்தி என்ற நெறிகளில் உத்தி வகை, இலக்கணவமைதி காட்டல், தருக்க நெறியில் விளக்கம் கூறல், வினாக்கட்கு விடை வழங்கல், கருத்துரை தருதல் என வருவன பலவற்றையும் நினைவிற் கொண்டு திருக்குறட்குப் பொருள் விளக்கம் செய்கிறார் பரிமேலழகர்.

"செய்து ஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று"

என்பது குறட்பா. அதன்கண், "செய்து ஏமம் சாராச் சிறியவர்" என்ற தொடர் பரிமேலழகரது இலக்கண அறிவை ஈர்க்கின்றது. "ஏமம் சாரா" என்ற தொடர் சிறியவர் என்ற சொல்லோடு இயைவது பொருத்தமா? "புன்கேண்மை" என்ற சொல்லோடு இயைவது பொருத்தமா? என்று ஒரு மயக்கம் உண்டாகிறது. அதை எண்ணிய பரிமேலழகர் "ஏமம் சாராச் சிறியவர்" என்று இயைப்பது உண்டு; அது கூடாது. "சிறியவர் என்பதனைக் கொள்ளின் செய்து என்பது நின்று

வற்றும்" என உரைக்கின்றார் உரை எழுதும்போது இத்தகைய குற்றம்படக் காண்பது முறையாகாது. இதைக் கருத்திற் கொண்டு, "இதற்குப் பிறரெல்லாம் சொல்லிலக்கணத்தோடு மாறுகொள உரைத்தார்" என்பதொன்றே பரிமேலழகர் நன்கு எண்ணி எழுதுகிறார் என்பது விளங்கும். (817)

"மறத்தல் வெகுளியை யார் மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும்"

என்பது வேறொரு குறட்பா. இதன்கண் இரண்டு கருத்துக்கள் கூறப்படுகின்றன. ஒன்று வெகுளியை மறத்தல் வேண்டும் என்பது மற்றொன்று அதனால் தீயவை பிறக்குமென்பது. இவ்விரண்டிற்கும் ஒரு தொடர்பு காட்டினாலன்றி, இரண்டும் ஒரு குறட்பாவில் கூறுதற்கு ஆகா கூறப்பட வேண்டுமாயின் இரண்டிற்கும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும் தொடர்பில்லாத இரண்டு கருத்துக்கள் ஒரு குறட்பாவில் கூறப்படா என்பது உரை மரபு ஆனால் இரண்டிற்கும் தொடர்பு காணும் போது வெகுளியை மறவாவிடத்து தீமை உண்டாகும் என இரண்டிற்கும் காரண காரியத் தொடர்பு கண்டு, மறத்தல் வெகுளியை என்பதை மேற்கோளாகவும் (பயனாகவும்). தீயவை பிறத்தல் அதனால் வரும் என்பதை ஏதுவாகவும் நிறுத்திப் பரிமேலழகர் பொருள் உரைக்கின்றார். அது அவரது உரைக்கு ஏற்றமும் அழகும் தருகிறது.

"கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"
"செவியிற் சுவை யுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்"

எனச் சில குறட்பாக்களைத் திருவள்ளுவர் வினா வடிவில் தருகின்றார். உரைகாரன் அதற்கு விடை கூறவேண்டும். அது உரை மரபு. "பயன் என்கொல்" என்பதற்கு விடை கூறும் பரிமேலழகர் "பயன் இல்லை" என்று கூறல் வேண்டும். இங்ஙனம் கூறுபவர் "என் கொல்" என்பதைப் பற்றிக் கொண்டு, இதன்கண் "எவன்" எனும் வினாப் பெயர் "என்னென்றாய் ஈண்டு (பயன்) இன்மை குறித்து நின்றது" என்கின்றார்.

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்"

என்ற இக்குறளுக்கு உரை எழுதும் பரிமேலழகர் வாயுணர்வின் மாக்கள் அவியினும் வாழினும் பயன் இல்லை என்றல் வேண்டும்; ஆனால் அவர் அதனை, "செத்தால் இழப்பதும் வாழ்ந்தால் பெறுவதும் இன்மையில் இரண்டும் ஒக்கும்" என்கின்றார். இவ்வாறே,

"உறினட் டறினொரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்"

என்ற திருக்குறள் உரையில் நட்பால் பயனும், பிரிவால் இழப்பது ஒன்றுமில்லை என்று சொல்ல வரும் பரிமேலழகர் "அவர் மாட்டு நொதுமற் றண்மையே அமையும்" என உரைக்கின்றார்.

இனி திருவள்ளுவர் பொதுவாக உரைக்கின்ற சில கருத்துக்களைத் தெளிவுபட விளக்குவதே உரைகாரர் கடன் என்ற உண்மையைக் கடைப்பிடித்துப் பரிமேலழகர் விளக்குகின்ற திறம் இனிது தோன்றுகிறது.

"யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும்
வாய்மையின் நல்லபிற"

என்ற குறளில் "யாம் மெய்யாக் கண்டவை" எனச் சிலவற்றைப் பொதுவகையாற் கூறுகின்றார் திருவள்ளுவர், அவை யாவை? எனக் கேட்கும் மாணவருக்கு விடை கூறுவது உரையாசிரியர் கடன் இக் கடமையை அறிந்தாற்றுகின்ற பரிமேலழகர், உரையின்கண் "மெய்யாக் கண்டவை. ஆகமங்கள் என உரைக்கின்றார்" அது எங்ஙனம் எனும் வினாவிற்கு விளக்கம் எய்தும் பொருட்டு, தங்கண் மயக்க மின்மையின் பொருள்களை உள்ளவாறு உணரவல்லாராய்க் காம வெகுளிகளின்மையின் அவற்றை யுணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய இறைவர் அருளான் உலகத்தார் உறுதி யெய்துதற் பொருட்டுக் கூறிய ஆகமங்கள் என்று தெரிவிக்கின்றார் ஆகமங்களை மெய்ந் நூல்கள் என விளக்கக் கருதும் பரிமேலழகர், ஆகமங்களை உரைத்த ஆசிரியர்களை, பொருள்களை உள்ளவாறு உணர வல்லவர் என்றும், உணர்ந்தவற்றை உரைக்க வல்லவர் என்றும் அவரே இறைவர் என்றும் தெரிவிக்கின்றார். ஆகமங்களை அவர் ஏன் எழுதினர் என்பதற்குக் காரணமும் காட்டுகின்றார். உலகத்து மக்கள் மேல் உண்டான அருள் உணர்வால், அவர்கள் உறுதி எய்தும் பொருட்டு இந்த ஆகமங்கள் எழுதப்பட்டன என விளக்கும் வகையில் "அருளான் உலகத்தார் உறுதி எய்துதற் பொருட்டு" என்கின்றார்.

இனி பொய்யாமை, கொல்லாமை ஆகிய இரண்டு அறங்களை வற்புறுத்துகின்ற திருவள்ளுவர்,

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என உரைக்கின்றார். இக்குறளைக் கேட்கும் மாணவன் உள்ளத்தில், இரண்டறத்துள்ளும் யாது சிறந்தது என்ற ஐயம் எழுகிறது. திருவள்ளுவரே, முதன்மையைக் கொல்லாமைக்கு வைத்து அதற்குப் பின் பொய்யாமையை வைத்து உரைக்கின்றார் என்று சொல்வது ஒருவாற்றால் விடையாகும் அதன்கண், காரணம் காட்டப்படாமையால், காரண காரிய முறையில் வைத்து உரைப்பது உரைகாரர் கடமையாகிறது அதனால், பரிமேலழகர் "பொய்யாமை பொய்யாமை யாற்றின்" எனவும், "யாமெய்யாக் கண்டவற்றுளில்லை" எனவும் கூறினாராகலின், இரண்டறத்துள்ளும் (கொல்லாமை, பொய்யாமை) யாது சிறந்ததென்று ஐயம் நிகழுமன்றே, அது நிகழாமைப் பொருட்டு ஈண்டு அதன் பின்சாரப் பொய்யாமை நன்றென்றார்; முற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்தாகலின், அதனைப் 'பின்சார நன்றென்றது" நன்மை பயக்கும் வழிப் பொய்யும் மெய்யாயும், தீமை பயக்கும் வழி மெய்யும் பொய்யாயும் இதனைப் பற்ற, அது திரிந்து வருதலான் என உணர்க" என எழுதுகிறார். இதனை இந்நாளைய சீர்த்த இலக்கிய விமர்சகர்கள் (Advanced literary Critics) Logical interpretation with psychological segeence என்று கூறுகின்றனர்.

இனி, "மெய்யுணர்தல்" என்ற பகுதியில் மெய்ப்பொருளுக்குச் செம்பொருள் என்ற பெயர் குறித்து,

"பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு"

எனத் திருவள்ளுவர் கூறுகின்றார். "செம்பொருள்" என்பதை விளக்க வந்த பரிமேலழகர், 'தோற்றக் கேடுகள் இன்மையின நித்தமாய், நோன்மையால் அதனை யொன்றும் கலத்தல் இன்மையின் தூய்தாய். தான் எல்லாவற்றிலும் கலந்து நிற்கிற முதற்பொருள் என்றார்" என உரைக்கின்றார். இது ஒரு சமய சாத்திரம் படிக்கின்றோமோ என நம்மை மருட்டி இன்பம் செய்கிறது. இனி,

"வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமையிலாத சொலல்"

என்ற குறட்பா உரையில், "எனப்படுவது" என்பதற்கு "என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது" எனப் பொருள் கூறுகின்றார் பரிமேலழகர். "எனப்படுவது" என்பதற்கு "என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது" என்று பொருள் கூறுதல் பொருத்தமா? என்று வினா எழுப்பிய மாணவனுக்கு விடை கூறுகிறார் பரிமேலழகர். வழக்கில், ஊர் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் உறையூரை எடுத்துக் காட்டி, "ஊரெனப்படுவது உறையூர்" என்றாற் போல என உரைக்கின்றார். நூல் உரை காண்பவர் இலக்கணத்தையோ, வேறு நூற்களையோ காட்டாமல் வழக்கினை எடுத்துக் காட்டுவது முறையாகுமா? எனின்,

"வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட்டாக லான"

என்று தொல்காப்பியம் வழக்கினைக் காட்டுவது நேரிது எனக் காரணத்தோடு கட்டுரைக்கின்றது. ஆகையால் "என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது" என்று வழங்குதல் பொருத்தமே என உய்த்துணர வைக்கின்றார் பரிமேலழகர்.

ஒரு தலைவரின் கீழ் பணிபுரிபவன் தன்னை அவர் ஐயுறத் தக்க வகையில் நடந்து கொள்ளக்கூடாது; ஐயம் பிறந்து விடுமானால், பிறகு தெளிவிக்க ஒருகாலும் ஆகாது என்ற கருத்துப்பட,

"போற்றின் அறியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது"

என்று திருவள்ளுவர் கூறுகிறார் "கடுத்தபின் (ஐயம் தோன்றிய பின்) தேற்றுதல யார்க்கும் அரிது" என்பது எவ்வாறு பொருந்தும் என மாணவன் கேட்கின்றான். இங்ஙனம், ஐயம் தெளிவு பெற வேண்டுங்கால் உரைகாரர்கள் இலக்கணம், வழக்கு, ஏது, எடுத்துக்காட்டு என்ற நான்காலும் விளக்கம் செய்வர். இங்கே நான்கனுள் இதனை எடுத்துக் காட்டால் விளக்கம் செய்கின்றார் பரிமேலழகர் "கடன் கொண்டான் தோன்றப், பொருள் தோன்றுமாறு போலக் கண்டுழி யெல்லாம் நினைக்கப்படுதலின் தேற்றுதல் யார்க்கும் அரிது" என எடுத்துக் காட்டினால் உரைக்கின்றார்.

பரிமேலழகரது உரையிற் காணப்படும் பல்வேறு அழகுகளில் அரிய சொல்முடிவு காட்டி இலக்கண அமைதி கூறுவது ஒன்று. "கவ்வையாற் கவ்விது காமம்" என்ற குறட்பாவில்

"கவ்விது" என்பது சவ்வையென்னும் சொல் அடியாகவந்தது; ஆனால் அங்ஙனம் வருதற்குத் தமிழ் இலக்கணத்தில் இடமில்லை; செய்யுளினும் வழக்கு வலியுடைத்து என்பது பற்றி. "செவ்வை யுடையதனைச் செவ்விது என்றாற் போலக் கவ்வையுடையதனைக் கவ்விது என்றார்" என்று பரிமேலழகர் உரைப்பது இலக்கணப் புலவர்க்கு வியப்பும் இன்பமும் தருகிறது. காரணம் என்ன எனின், செவ்வை உடையதனைச் செவ்விது என்றல் தொல்காப்பியர் மரபு. "எவ்வயிற் பெயரும் வெளிப்படத்தோன்றி அவ்வியல் நிலையல் செவ்விது என்ப", என்பது தொல்காப்பியம். அதை நினைவிற் கொண்டு பரிமேலழகர், "செவ்விது" என்றாற் போல என உரைக்கின்றார் இவ்வாறே ஒரு குறட்பாவில் "புலப்பாயாக" என்பது "புலத்தி" என்று வராமல் "புலத்தை" என வருகிறது அவ்வாறு வருதற்குச் சொல்லியல் காண்கின்ற பரிமேலழகர், தமிழ் மரபு காணாது புதியதொரு சூழ்ச்சி செய்கின்றார். புலத்தை என்பதன் ஈற்றெழுத்தைப் பிரித்து விகுதி என்று பெயரிட்டு. அதற்கு மேற்கோளாகக் கலித்தொகைப் பாட்டில் ஒன்றைப் பற்றிக் கொண்டு "புலத்தை என்புழி ஐகாரம். கடம் பூண்டு ஒருகால் நீவந்தை, என்புழிப் போல முன்னிலை வினை விகுதி" என உரைக்கின்றார்; விகுதி யென்று நிறுத்தி இலக்கணம் காண்பது தொல்காப்பியர் காலத்திலோ வள்ளுவர் காலத்திலோ மரபன்று. பரிமேலழகரே மேற்கொண்டுரைப்பது புது மரபு; பல்லவர் காலத்திற்குப் பின் வந்த இலக்கணப் புலவர் செயல் வகை.

வடமொழி முதலிய மொழிகளின் மரபும், தமிழ் மரபும் வேறு வேறு இயல்பின என உணர்ந்து ஆங்காங்கு அவ்வேற்றுமையை எடுத்துரைத்து மகிழ்விப்பதிலும் பரிமேலழகர் சிறப்புடையவர். தன் உயிரைக் காக்க வேண்டி வருமிடத்து, ஒருவனை மானம் கருதல் ஆகாது என்பது வடநூல் மரபு "இன்றியமையாச் சிறப்பின ஆயினும் குன்ற வருப விடல்" என்று திருக்குறள். வடநூல் மரபுக்கு மாறுபட நிற்பது காண்கிறார் பரிமேலழகர் ஆதலால் "இறப்ப வருவழி இளிவந்தன செய்தாயினும் உய்க" என்ற வடநூல் முறைமையை மறுத்து, உடம்பினது நிலையான்மையையும், மானத்தினது நிலை உடைமையையும் தூக்கி, அவை செய்யற்க" என்பதாம் என உரைக்கின்றார். இவ்வாறே,

> "ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
> சான்றோர் பழிக்கும் வினை"

என்ற திருக்குறளில் தமிழ் மரபின் தனி இயல்பை விளக்குகின்றார்.

இனி அக்காலத்தில் ஏடும், எழுத்தாணியும் கொண்டு எழுதுவது மரபாகலின், திருக்குறள் உரையின்கண், சில இடங்களில் பரிமேலழகர் முன் எழுதியதை மறந்து தவறுதலும் செய்கின்றார்.

''நாளென ஒன்று போற் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்''

என்பது திருக்குறள். இதற்குத் தாம் ஓர் உரை வகுத்துக் கொண்டு, பிறர் கூறும் உரையை மறுத்து ஒதுக்குகின்றார், பரிமேலழகர் இதற்குப் பிறர் கூறும் உரை, ''நாள் என்பது ஒரு பொருள் போலத் தோன்றி உயிரை ஈர்வதொரு வாள்'' என்பது. இதன்கண், ''நாளென ஒன்று'' என்பதற்கு ''நாள் என்பது ஒன்று'' எனப் பொருள் பிறரால் உரைக்கப்படுகிறது. இவ்விடத்து ''என'' என்ற சொல் ''என்பது'' எனப் பொருள் படுகிறது. (1) ''என'' என்பது ஓர் இடைச்சொல்லேயன்றி பெயர்ச்சொல் அன்று என்பது பரிமேலழகர் கொள்கை. அது (என) ''என்பது'' எனப் பொருள்படக் கூடாது. (2) ஒன்று போல் காட்டி என்பதற்கு ''ஒரு பொருள் போலத் தோன்றி'' என்று பொருள் உரைக்கப்பட்டிருக்கிறது அப்படிச் சொல்வதில் பொருள் சிறப்பு இல்லை என்பது பரிமேலழகர் கொள்கை. ''வாளது'' என்றவிடத்து ''அது'' என்பது குற்றியலுகரம் அன்று ஆகவே பரிமேலழகர் கருத்துப்படி ''அது உணர்வார்'' என புனராது முறைப்பட வர வேண்டுமாயின் ''அஃதுணர்வார்ப் பெறின்'' என வருதல் வேண்டும். அவ்வாறு இல்லாமையால் இதற்கு பிறர் கூறுவது பொருந்தாது என்ற கருத்துப்பட ''என'' என்பது பெயரன்றி, இடைச்சொல் ஆகலானும், ''ஒன்று போற்காட்டி என்பதற்கு ஒரு பொருட் சிறப்பின்மையாலும். ''அது'' என்பது குற்றியலுகரம் அன்மையாலும், அஃது உரையன்மை அறிக, என்று பரிமேலழகர் மறுக்கின்றார்.

இனி பரிமேலழகர் கருத்தை ஆராய்வோம் ''என'' என்னும் சொல் இடைச்சொல்லே யன்றி பெயர்ச் சொல் அன்று எனப் பரிமேலழகர் கருதுவது தொல்காப்பியத்திற்கு முரன் ஆனது. என என்னும் இடைச்சொல் பெயர்ப் பொருளிலும் வரும் என்ற கருத்துப்பட ''வினையே குறிப்பே இசையே பண்பே, எண்ணே பெயரோடு அவ்வாறு கிளவியும் கண்ணிய நிலைத்தே, என என் கிளவி'' (தொல். இடை-10) என்று தொல்காப்பியம் கூறுகிறது. அடுத்து ''ஒன்று போல் காட்டி'' என்பதற்கு ஒரு பொருள் போலக் காட்டி என்றதில் பொருள்

சிறப்பில்லை என்கிறார். ஆனால் அவர் இல்லை என்பதற்கு தக்க காரணம் கூறாமையால் அவர் உரை செல்லாதாகிறது மூன்றாவதாக "வாளது" என்பதிலுள்ள "அது" என்னும் சொல் குற்றியலுகரமன்று எனக் காட்டி மறுப்பது, அவர் பிறிதொரு இடத்தில் உரைத்த உரையையே மறுக்கிறது. அதாவது 'உண்ணுமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன், புண்ண துணர்வார்ப் பெறின்'' என்ற குறட்பாவின் உரையில் ''புண்ண துணர்வார்'' எனப் புணர்ந்ததற்கு, "அஃது என்னல்வேண்டும் ஆய்தம் விகாரத்தால் தொக்கது'' என உரைத்தார் பரிமேலழகர், அவரே, ''நாளென ஒன்று போல் காட்டி'' என்ற திருக்குறள் உரையில் '' வா ள து '' என்ற விடத்து, ''அஃது என்னல் வேண்டும் ஆய்தம் விகாரத்தால் தொக்கது என்று தானே கொள்ள வேண்டும். அவ்வாறு கொள்வது உரை முறைமையன்று.

இனி ஓரிடத்தில் எழுவாய் பயனிலையைத் தெளிய நோக்காமல் தடுமாறுகின்றார் பரிமேலழகர்,

> ''வித்தும் இடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
> மிச்சில் மிசைவான் புலம்''

என்ற திருக்குறட்கு ''மிசைவான்'' என்பது எழுவாயும் ''வேண்டுங் கொலோ'' என்பது பயனிலையும் ஆகும். அதனைத் தெளியாமல் ''இடல் வேண்டும்'' என்பதை எழுவாயும் பயனிலையுமாகக் கொண்டு ''மிசைவான் புலம் வித்தில்லாமலே விளையும்'' எனப் பொய்யுரை புகலுகின்றார். இக்குறட்டாவை உண்மை நெறியில் நின்று நோக்குவோமாயின் விருந்தோம்பி மிச்சில் மிசைபவன் (தன் பால்) உள்ளது வித்தே ஆயினும் விருந்திற்கு இடுவதே தவிர, புலத்திற்கு இட விரும்பான் என்பது நேரிய பொருளாம்.

இங்ஙனம் ஒரு சில தவறுகள் ஆங்காங்கு காணப்படினும் பழமையிற் புதுமையும், தருக்கத்தில் இலக்கணமும், விளக்கத்திற் சுருக்கமும், நூல் வழக்கொடு உலகியலும் புகுத்தி நுண்மையும் மாண்பும் அழகும் தெளிவும் பரிமேலழகர் உரைக்கென்றமைந்த சிறப்புக்கள் என்பது யாவரும் நினைவிற் கொள்ளத் தக்கது.